# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ரூபா 200 வரை கிடைக்கும்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 325
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 20 ஷவ்வால் 25 ஞாயிற்றுக்கிழமை [4-1-70]




கோட்டை, ஞாயிறு
வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட தனிநபர் ஒருவருக்கு 200 ரூபாவரை நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது. பிரதமரின் உத்தரவின் பேரிலேயே 100 ரூபாவரை விருந்த இந்த நிவாரண உதவி 200 ரூபாவாகா உயர்த்தப்பட்டுள்ளது.

சேதமடைந்த வீடுகள் திருத்துவதற்கு 300 ரூபாவிலிருந்து 500 ரூபாவரை நிவாரண உதவி வழங்கப்படவிருக்கிறது.

மாத்தறையில் சுமார் 10,000 வீடுகள் வெள்ளத்தினுல் சேதமடைந்துள்ளதாகவும் மற்றப்பகுதிகளில் மதிப்பீடுநடை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மகாதேசாதிபதி உதவி

சமூகசேவைகள் அமைச்சர் ஆரம்பித்துள்ள வெள்ள நிவாரண நிதிக்குமகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா ரூபா 1000நன்கொடை வழங்கியுள்ளார்.

இந்தநிதிஉதவிக்குவழங்கப்படும் நிதிக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## ஏழை நாடு அல்ல ஏழைகள் உள்ள நாடு

### இந்தியா பற்றி இந்திரா

புதுடில்லி, ஜன, 3
"உழைத்து வெல்க" என்ற புதிய கோஷத்தை நாட்டுக்கு பிரதமர் இந்திரா காந்தி அளித்துள்ளார்.

நாம் செய்யும் உழைப்பில் நாட்டின் வெற்றி இருக்கிறது என்று அவர் கூறினுர்.

ஆனுல் கோஷங்களால் மட்டும் அதிக பயனில்லை என அவர் எச்சரித்தார். இருந்தபோதிலும் ஒருவரின் நம்பிக்கையையும் லட்சியத்தையும் குறிப்பிடுவதால் கோஷத்தை அளிப்பதாக அவர் சொன்னுர்.

தேசிய ஈடுபாட்டுடன் பெரும்பாலான மக்கள் கடுமையாக உழைத்தால் தான் நாட்டின்சிரமங்களைத் தீர்க்கமுடியும் என்று ஒரு பேட்டியில் பிரதமர் மேலும் கூறினுர்.

இந்தியா ஒரு ஏழை நாடலல்ல, ஆனுல் ஏழைகள் உள்ள நாடு என்று அவர் சொன்னுர். வழிகாட்டியாகவும், சர்வாதிகாரியாகவும் ஒருவர் தன்னை நியமித்துக்கொள்வதால் ஏழ்மையிலிருந்து மக்களை மீட்க முடியாது, கடும் உழைப்பால் தான் அதைச் செய்யமுடியும் என்றுர்.

நான் எப்பொழுதுதாவது சர்வாதிகாரியாவேன் என நான் நினைக்கமுடியாது. ஜனநாயக செயற் பாட்டுக்காகவேபோராடுகிறேன் ஏழ்மையைஎதிர்த்துப்போராட சர்வாதிகாரி அவசியமில்லை. சர்வாதிகாரியால்மக்களுக்கு பலமும் ஏற்படாது என்றுர் இந்திரா காந்தி.

ஜனநாயகத்தில் அடிப்படைதார்மீகம், மக்களுக்கு சேவையாகும் மக்கள் கருத்தைவிட தன்கருத்து மேலானது என நினைப்பவருக்கு இந்த அடிப்படை தார்மீகம் இல்லை என்றுர் அவர்.

ஒவ்வொருவரின் எழுத்துரிமையை அவர்அங்கீகரித்தார். ஆனுல் பொறுப் புணர்ச்சியுடன் அந்த உரிமை பயன்படுத்தப்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ரஷியாவைத்தான் பின்பற்றுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை அவர்மறுத்தார். அத்தகைய குற்றச்சாட்டு அபத்தமானது என்றுர்.

அத்தகைய குற்றச்சாட்டைக் கூறுவோரின்நோக்கம் பற்றி யாதும் சொல்ல விரும்பவில்லை என்றுர்.

### ஊழியர் பொலிசார் கைகலப்பு

கொழும்பு, ஞாயிறு
முகத்துவாரத்தில் மீன்பிடி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும்நேற்றிரவு 8-30 மணியளவில் நடைபெற்ற கைகலப்பொன்றில் பத்துக்கு மேற்பட்டவர்கள் காயமுற்றனர்.

### 170,000 பேர் பாதிக்கப்பட்டனர்

மட்டக்களப்பு, சனி
மட்டக்களப்பு மாவட்டத்தின் 220,000 பேர் ஜனத்தொகையில் சுமார்170,000 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. பி. நேசையா தெரிவித்துள்ளார். 34,000 குடும்பங்களுக்கு இருப்பிட வசதியளிக்கப்பட்டுள்ள தாகவும், 6 பேர் காயமடைந்துள்ள தாகவும் அவர் பத்திரிகைக்குத் தெரிவித்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

— —

### இறந்தவர் தொகை 28 ஆக அதிகரித்துள்ளது

கோட்டை, சனி
சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டு இறந்தோர் தொகை 28 எனக் கடைசியாகக் கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது.

மாத்தறை மாவட்டத்தி

## கிழக்கு, தெற்கு

# வெள்ள அகதிகளுக்கு தாராளமாக உதவுங்கள்

## வடபகுதி மக்களுக்கு அரசாங்க அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஞாயிறு
வெள்ளப்பெருக்கினுல் கிழக்கு மாகாணத்திலும் தென்னிலங்கையிலும் கஷ்டங்களுக்குள்ளாகி வீடுவாசல்களை இழந்தும், உடைமைகளைப் பறி கொடுத்தும் உயிர்களைப்பலி கொடுத்தும் கொடுமைகளுக்காளாகி தவிக்கும் குடும்பங்களுக்கு தாராளமாக உதவிகள் புரிய முன்வரும்படி வட மாநில மக்களுக்கு அரசாங்க அதிபர் திரு. எவ். சி. பீட்டர்ஸ் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறுர்.

பணமாகவோ வேறு உடை பொருள் வகையாகவோ இந்த நிலைக்குள்ளாகியுள்ள மக்களுக்கு மனமுவந்து கஷ்ட நிவாரண உதவிகள்

மாறு யாழ்ப்பாண மக்களை வேண்டிக் கொள்கிறேன்.

உத... கிறவ... அதிகாரிகளின் காரியால...

படும். இதில் ஒரு பகுதி யாழ்ப்பாணத்தில் வெள்... ல் பாதிக்கப்பட்ட மக்... க்கும் வழங்கப்படும்.

தேவாலயத்திலும்...

"பல்கலைக்கழக கோரிக்கை

## மதப் பூசல்களுக்கு கருவியாகிவிடக்கூடாது"

உடுப்பிட்டி, சனி
"தமிழர்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் நிறுவவேண்டியது அவசியம் என வலியுறுத்தி வரும அரசியல் வாதிகள் தமிழ்ப் பல்கலைக்கழகம்.இந்துப் பல்கலைக்கழகம் எனப் போட்டி போட்டுக் கருத்து மோதல்களை ஏற்படுத்திவருவது வேடிக்கையாக உள்ளது. தமிழினத்தின் உரிமைக்காகப் பாடுபடும் இவர்கள் தமிழ் இனத்தை இந்து, தமிழ் எனப் பிரிப்பது வேதனையை ஏற்படுத்துகின்றது".

இவ்வாறு உடுப்பிட்டித் தமிழ் மன்றத் தலைவர் டாக்

இந்துப் பல்கலைக்கழகம் கோருவது தமிழ்க் கத்தோலிக்கமக்களை அவமானத்துக்குள்ளாக்கும் செயலாகும் இன்று கத்தோலிக்க மக்களுக்குப் பொதுவான தமிழ்ப் பல்கலைக் கழகமே எமக்கு இன்று வேண்டும். சிங்கள மக்களிடமிருந்து ஓரளவு உரிமைகளைத் தானும் இன்னும் பெற்றுவிடாத தமிழினத்திடையே மதப் பூசலைக் கிளப்பி விடும் கருவியாக இப் பல்கலைக்கழகம் பயன்படக் கூடாது".

பல்கலைக்கழகம் நிறுவும் விடயத்தில் அரசியல் கட்சிகளின்

### பயிர்கள் நாசம்

## கடந்த வருடம் மழை இல்லை; இவ் வருடம் பெருமழை

யாழ்ப்பாணம், ஞாயிறு
தொடர்ந்துபெய்த பெருமழைகாரணமாக, வவனிக் குளத்தையும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் பெருவெள்ளம் ஏற்பட்டது. பள்ளப்பகுதியில் வசித்த விவசாயிகள் கடற்படையினரின் படகுகள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டனர்.

பனங்காமம், கரும்புள்ளியான் இடதுகரை முதலிய இடங்களுக்குபோகும்பாதை

மழையால் அவதியுறுகின்றனர் என விவசாயிகள் கவலைதெரிவித்தனா.

### இராமநாதபுரம் வீதிகள் முற்றாக பாதிப்பு

இராமநாதபுரம், ஞாயிறு
இராமநாதபுரத்தில் வீதிகள் எல்லாம் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...னத்தின் உரிமைக்காகப் பாடுபடும் இவர்கள் தமிழ் இனத்தை இந்து, தமிழ் எனப் பிரிப்பது வேதனையை ஏற்படுத்துகின்றது''.

இவ்வாறு உடுப்பிட்டித் தமிழ் மன்றத் தலைவர் டாக்டர் திரு.ஆ. திருச்சிற்றம்பலம் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

''தமிழ் மக்களிடையே இந்து, கத்தோலிக்க மதத்தவர்கள் உள்ளனர். கத்தோலிக்க மதத்தைத் தழுவிய தமிழர்களை உதாசீனம் செய்து இந்து மதத்தவர்களுக்கெனத் தனியான பல்கலைக்கழகம் என்றகோரிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

...விடாத தமிழினத்திடையே மதப் பூசலைக் கிளப்பி விடும் கருவியாக இப் பல்கலைக்கழகம் பயன்படக் கூடாது''.

பல்கலைக்கழகம் நிறுவும் விடயத்தில் அரசியல் கட்சிகளின் தலையீடு அவசியம் தவிர்க்கப் பட வேண்டும். கல்விமான்களின் கருத்துக்களை ஆராய்ந்து அதன்படி தமிழினத்துக்குப் பொதுவான பல்கலைக்கழகம் நிறுவுவதே புத்திசாலித்தனமாகும்.

''தமிழ்ப் பல்கலைக்கழகம் எங்கே நிறுவினாலும் பரவாயில்லை. ஆனால் மாவட்ட சபைபோல் பல்கலைக்கழகமும் இல்லாததாகி விடக்கூடாது என்பதே எமது பேரவா'' என்றும் கூறினார்.

உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார்.

பணமாகவோ வேறு உடைபொருள் வகையாகவோ இந்த நிலைக்குள்ளாகியுள்ள மக்களுக்கு மனமுவந்து கஷ்ட நிவாரண உதவிகள் புரியும்படி அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். இது சம்பந்தமாக அரசாங்க அதிபர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

சமீபத்தில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் மட்டக்களப்பு மாத்தறை ஆகிய இடங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களிலுள்ள வெள்ள அகதிகளுக்கு உணவுப் பொருட்கள் பால் உணவுப் பொருட்கள் உடை நிதி ஆகியவற்றைத் தந்துதவுமாறு யாழ்ப்பாண மக்களை வேண்டிக் கொள்கிறேன்.

உதவிகள் வழங்க விரும்புகிறவர்கள் அவற்றைக் காரியாதிகாரிகளின் காரியாலயத்திலோ அல்லது யாழ். கச்சேரியிலுள்ள சமூக சேவைப்பகுதியிலோ கொடுக்கலாம். பண உதவிகளை 'ஈழநாடு' பத்திரிகை காரியாலயத்திலும் கொடுக்கலாம், இந்த நிதி உதவி பொருளுதவியாவும் மட்டக்களப்பு மாத்தறை ஆகிய பகுதிகளின் அரசாங்க அதிபர்களிடம் அப்பகுதி வெள்ள அகதிகளுக்கு வழங்குவதற்காகக் கையளிக்கப்படும். இதில் ஒரு பகுதி யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வழங்கப்படும்.

தேவாலயத்திலும் [illegible]லை 9மணி தொடக்கம் 12மணி வரையும் பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் மேற்படி பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படுமெனவும் இந் நிலையங்கள் யாவற்றிலும் சேகரிக்கப்படும் பொருட்களும் பணமும் மேற்படி பாதிப்பு பகுதிகளுக்கு அனுப்புவதற்கு என்னிடம் ஒப்படைக்கப்படும்.

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டு இறந்தோர் தொகை 28 எனக் கடைசியாகக் கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது.

மாத்தறை மாவட்டத்திலேதான் கூடிய தொகையினர் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாத்தறை மாவட்டத்தில் ஏழு பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 பேரும், எம்பிலிபிட்டியாவில் 5 பேரும் கொலன்னாவையில் 3 பேரும், கம்புறுபிட்டியாவிலும் வெலிகமவிலும் 5 பேரும் மரணமடைந்துள்ளதாகத் தெரிகிறது.

...ளப்பகுதியில் வசித்த விவசாயிகள் கடற்படையினரின் படகுகள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டனர்.

பனங்காமம், கரும்புள்ளியான் இடதுகரை முதலிய இடங்களுக்குபோகும்பாதைகளில் 11 அங்குலத்துக்கு மேற்பட்ட வெள்ளம் நிற்கின்றது. வெள்ளப் பாதிப்பால் சுமார் 1000 ஏக்கருக்கும் அதிகமான நெல் வயல்கள், கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதியில் உள்ள யோகபுரம் பகுதியில் வசிக்கும் மக்கள் தாங்கள் பெற்ற விவசாயக் கடனைத் திருப்ப முடியாதவர்களாக உள்ளனர்.

சென்றவருடமும் மழையின்மையால் வேளாண்மையில் நட்டம் அடைந்த விவசாயிகள் இவ்வருடம் கடும்...

## வீதிகள் முற்றாகப் பாதிப்பு

இராமநாதபுரம், ஞாயிறு

இராமநாதபுரத்தில் வீதிகள் எல்லாம் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன. இப்பகுதி மக்கள் எந்தப்பகுதிக்கும் போக முடியாமல் அவதியுறுகின்றனர். கடைக்காரரும் தங்களிடம் உள்ள பொருட்களை விலைகூட்டி விற்கின்றனர். உணவுப்பொருட்கள் பெறுவதில் இப்பகுதியில் மிகவும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது; கிளிநொச்சி எம்.பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளார்.

# 1 லட்சத்து 20 ஆயிரம் கலன் பெற்ரேல் மறைந்தது!

## பெற்ரோலியம் கூட்டுத்தாபன அதிகாரி கைது

கொழும்பு, ஞாயிறு

பெற்ரோலியம்கூட்டுத்தாபனத்தின் கையிருப்பிலிருந்த 1லட்சத்து 20 ஆயிரம் கலன் உயர்ரக (சுப்பர்) பெட்ரோல் களவாடிச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அநுராதபுரத்திலுள்ள கூட்டுத்தாபன பாதுகாப்பு அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

சமீபத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தின் போதே இவ்வித களவு நடைபெற்றதாக சந்தேகிக்கப்படுகிறது. இந்த கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான வேறுபொருள்கள் சிலவற்றையும் இப்போது காணவில்லையாம்.

அண்மையில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டபோதே இந்த திருட்டுவெளிவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரத்திலுள்ள பாதுகாப்பு அதிகாரியை கொழும்பிலிருந்து சென்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் கைதுசெய்தார். கைதுசெய்யப்பட்ட அதிகாரி முன்னைநாள் பொலிஸ் கான்ஸ்டபிள் எனக் கூறப்படுகிறது.

இதுசம்பந்தமாக மேலும் சிலர் கைதாகலாம் எனத் தெரியவருகிறது.

## வாஷிங்டனில் இலங்கை பொருட்கள்

கோட்டை, ஞாயிறு

அடுத்தமாதம் வாஷிங்டனில் நடைபெறும் ஒரு பொருட்காட்சியில் இலங்கையின் கலாசாரப்பொருட்கள் காட்சிக்குவைக்கப்படவிருக்கின்றன.

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கும்

கோட்டை, சனி

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரண உதவிகள் கிடைக்கும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதென்று அரசாங்கமும் முடிவு செய்திருக்கிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வீடுகளை முற்றாக இழந்து போனவர்களுக்கும், வெள்ளத்தினால் மரணமானவர்களின் குடும்பங்களுக்கும் உடனடியாக நிவாரண வசதிகள் செய்துகொடுக்கவும் முடிவுசெய்யப்பட்டது.

நேற்று வெள்ள நிலைமைகள் பற்றி ஆராய்வதற்காக அவசரமாகக் கூடிய மந்திரி சபை இந்த முடிவையெடுத்தது.

வெள்ள நிவாரண உதவிகளுக்கென வெள்ள நிவாரண அவசர நிதியொன்றை சமூக சேவைகள் அமைச்சர் ஆரம்பித்திருக்கிறார். இந்த நிதிக்குப் பண உதவிகள் செய்ய விரும்புகிறவர்கள் சமூக சேவைகள் பகுதி டைரக்டருக்கு அவற்றை அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளன.

மலைநாட்டில் வெள்ளநிலைமைகள் சீரடைந்து வருவதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பல இடங்களில் தடைப்பட்டிருந்த போக்குவரத்துகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. இரத்தினபுரிப் பகுதியில் வெள்ளம் வடியத் தொடங்கிவிட்டது. அங்கு காலநிலை சீராகிவிட்டது. தடைப்பட்டிருந்த பாதைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

## இந்திய செஞ்சிலுவைச் சங்கம் உதவி

இலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளக் கொடுமைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க இந்திய செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்திருக்கிறது

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சௌக்கியதான இயக்கம், பௌத்த காங்கிரஸ் போன்ற இயக்கங்கள் ஏற்கனவே நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ளன.

மட்டக்களப்பிலும், அம்பாறைப் பகுதியிலும் வெள்ள நிலைமையை நேரில் பார்வையிடுவதற்கும் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா நாளை (ஞாயிறு விமானத்தில் செல்லவிருக்கின்றார்.

## எகிப்தியரின் ரடார்கருவிகளை இஸ்ரேலியர் கடத்திச் சென்றனர்

டெல்அவிவ், ஜன. 3

ஐக்கியஅரபுக் குடியரசிடமிருந்து ரஷ்ய 'ரடார்' பொறிகள்பொருத்தப்பட்ட படகு ஒன்றை இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப்படகை கைப்பற்றி அதிலிருந்த பத்து லட்சம் டாலர் பெறுமதியான ஏழு தொன்பாரமுள்ளகருவிகளை இஸ்ரேலியர் கழற்றிக் கொண்டு போய்விட்டதாகவும் அறிவித்துள்ளனர்.

ஒரு வாரத்துக்கு முன்பு இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் பற்றிய தகவல் இப்பொழுது தான் வெளியிடப்பட்டுள்ளது ரடார் பொருத்தப்பட்ட படகைவிமானங்கள் சூழ்ந்துகொண்டு அதில் இஸ்ரேலிய தொழில் நுட்ப விற்பன்னர்கள் இறங்கி கருவிகளைக் கழற்றுவதற்கும் ஹெலிகொப்டர்களில் ஏற்றுவதற்கும் உதவி செய்ததாகவும் இஸ்ரேலியர் அறிவித்துள்ளனர்.

இதுபற்றி ஐக்கிய அரபுக் குடியரசு எதுவித அறிக்கையும் வெளியிட்டதாக தெரியவில்லை.

நேற்று லெபனன் கிராமமொன்றில் இஸ்ரேலியர் ஊடுருவிச் சென்று கொரில்லா நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் பலரைப் பிடித்துக் சென்றதாகவும் அறிவித்துள்ளனர்.

## மலேஷியா ரூபா 10,000 உதவி

கோட்டை, ஞாயிறு

இலங்கையின் வெள்ள நிவாரணத்துக்கென மலேஷியா 10,000 ரூபா உதவி வழங்கியுள்ளது. மேலும் உதவி வழங்குமாறு மலேஷிய பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் மக்களுக்கு வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## ஸ்தலஸ்தாபன ஊழியரின் குறைகள்

கோட்டை, சனி

சம்பளக் கமிஷனின் சிபாற்சிற்கிணங்க அரசாங்க ஊழியருக்கு வழங்கப்பட்டிருக்கும் இடைக்கால சம்பள உயர்வு சகல உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்று ஸ்தலஸ்தாபன அமைச்சு விடுத்த உத்தரவை இன்னும் சில ஸ்தலஸ்தாபனங்கள் அமுல் படுத்தாது காலதாமதம் செய்து வருவதை இலங்கை ஐக்கிய தொழிலாளர் யூனியன் கண்டித்துள்ளது.

# காரைநகர் – ஊர்காவற்றுறை பகுதிகட்கு கடல் ஊடாக இவ்வருடம் மின்சாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாடு பூராவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் 510 கிராம மின்சார அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்தும் 24 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் துன்னாலை, இளவாலை, மாதகல் ஆகிய கிராமங்களுக்கு ஏற்கனவே மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டது.

நாரந்தனை, காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய 3 கிராமங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் வெகுவிரைவில் மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. காரைநகருக்கும், ஊர்காவற்றுறைக்கும் கடல் நீரோடை ஊடாக மின்சாரம் விநியோகிக்கப்படும்.

தற்போது சுன்னாகம் மத்திய மின்நிலையத்திலிருந்து செயற்படும் மின் தொடர் யாழ்ப்பாணம், சுன்னாகம், காங்கேசன்துறை, மானிப்பாய், மூளாய், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பட்டினங்களுக்கும், இப்பட்டினங்களுக்கிடையேயுள்ள மற்றைய இடங்களுக்கும் மின் சக்தியை வழங்குகின்றது.

இவ்வருடத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு நீர் மின்வலுவின் மூலம் மின்சாரம் கிடைக்கவிருக்கின்றது. மஸ்கெலியா ஓயாத் திட்டம் மூலம் இம்மின்வலு மின்சாரம் கிடைக்கும். இதனால் கிளிநொச்சி, சாவகச்சேரிக்கு இடைப்பட்ட பகுதிகள் மின் சக்தியைப் பெறுகின்றன. (கா. நி)

## 8 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியிலிருந்து கடலட்டை, சங்கு, சுறா, பீலி ஆகிய கடல்படு திரவியங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தவகையால் எட்டு லட்சம் ரூபாயை அங்கத்துவ சங்கங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

## 14 வருடம் வரை திருத்தப்படாத வீதி

யாழ்ப்பாணம், சனி

அல்லைப்பிட்டியிலுள்ள பகிரங்க வேலைப்பகுதியினருக்குச்சொந்தமான பிரதான வீதிஒன்று பொது மக்களால் பாவிக்க முடியாத நிலையில் இருக்கிறது. இது பற்றி அல்லைப்பிட்டி சனசமூக நிலையத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளனர்.

மணல் நிறைந்த இப்பகுதிக்கு 1955-ம்ஆண்டு பிரதமராக விருந்த சேர், ஜோன். கொத்தலாவலை விஜயம் செய்து திரும்பிய பின்னர் இங்கு இவ் வீதியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். அதன் பின் இவ் வீதி திருந்தப்படவில்லை என புகார் கூறப்படுகிறது.

## உடுப்பிட்டி தொகுதி மூன்று பாடசாலைகளுக்கு ரூபா 40,000 ஒதுக்கீடு

புலோலி, சனி

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள வதிரி மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை, அல்வாய் தேவரையாளி இந்துப் பாடசாலை. புலோலி மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளின் கட்டிட வசதிக்காகக் கல்வி இலாகா நாற்பதினாயிரம் ரூபா வழங்கியிருக்கிறது.

இங்கு நிலவி வந்த கட்டிடப் பற்றாக்குறை சம்பந்தமாக இப்பாடசாலைகளின் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் உடுப்பிட்டி எம். பி. திரு.எம்.சிவசிதம்பரத்திடம் முறையிட்டதைத் தொடர்ந்து இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

புலோலி மெதடிஸ்ட் மிஷன் பாடசாலைக்குப் பத்தாயிரம் ரூபாவும், வதிரி மெதடிஸ்ட் மிஷன் பாடசாலைக்குப் பதினையாயிரம் ரூபாவும், வதிரி தேவரையாளி இந்துப் பாடசாலைக்குப் பதினையாயிரம் ரூபாவுமாக ஒதுக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

தேவை
வான் (Sales-man) விற்பனையாளர் பிணைப்பணம் கட்டவேண்டும். விளம்பர இல 1751, c/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1751


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன.

### ஞாயிறு 3—1—70

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 சதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வயலின், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 துதிப்பாடல்கள், 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம் 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடக இசை, 10-30 செய்திச்சுருக்கம்.

## தீவுப்பகுதிக்கு இலவசபாடப் புத்தகங்கள்

புங்குடுதீவு, சனி

தீவுப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவச பாடப் புத்தகங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டுள்ளது. புத்தகங்களை வழங்குவதற்கான பட்டியல்களை பாடசாலை அதிபர்களிடமிருந்து கோரி


## மனேஜர் தேவை

1. தகைமைகள்:
வயது: 25—35.
கல்வி: எஸ். எஸ் ஸி.யில் கணிதம் உட்பட 5 பாடங்களிலும் கூட்டுறவுப் பயிற்சியிலும் தேறியவராக இருக்க வேண்டும்.
2. பிணை: ரொக்கம் 500/- ஆதனம் 3000/-
3. மாதவேதனம்: ஆரம்பத்தில் ரூபா 100/- சகல படிகளுட்பட.
4. அண்மையில் பெற்ற 3 நற்சாட்சிப்பத்திரங்களுடன் காரியதரிசி, கரணவாய் மத்திய ஐக்கிய பண்டகசாலை, கரணவாய் தெற்கு, கரவெட்டி என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.
5. விண்ணப்ப முடிவு: திகதி 15-1-70.

கே. கே. தியாகராச
[கூ. பரிசோதகர்]
1901 காரியதரிசி.


## சைவப் புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சைவபரிபாலன சபையினரின் ஆதரவில் அண்மையில் நடந்து முடிந்த சைவப்புலவர் பரீட்சையில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல துறைகளையும் சேர்ந்த பலர் தோற்றினர். சைவப் புலவர், இளஞ் சைவப்புலவர், சித்தாந்த பாலபண்டித பரீட்சைகள் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி ஆர் - ஜெயலலிதா
சோ
நடித்த
காவல் காரன்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
கல்யாண பரிசு
புதிய கொப்பி

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெய்சங்கர்-எல்விஜயலக்ஷ்மி
நடித்த
உயிரா மானமா

வல்வெட்டித்துறை


# கடன்களை எப்படி திருப்பிக் கொடுப்பது

## விவசாயிகள் கவலை

மாவிட்டபுரம், சனி

சென்ற பல தினங்களாகத் தொடர்ந்து பெய்த அடைமழை காரணமாக வலி-வடக்குப் பகுதியில் பயிரிடப்பட்ட காலபோக வெங்காயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

வலி-வடக்கு காரியாதிகாரி பிரிவுக்குட்பட்ட காங்கேசன்துறை, அளவெட்டி, அம்பனை, பலாலி, ஏழாலை ஆகிய பகுதிகளில் காலபோகத்தில் விதைக்கப்பட்டிருந்த வெங்காயத்தில் 1 லட்சத்துக்கதிகமான ரூபாய் பெறுமதியான வெங்காயம் வெள்ளத்தால் அழிந்துள்ளது.

அளவெட்டி அம்பனைப் பகுதியில் பயிரிடப்பட்ட வெள்ளத்துக்கு ஒரு அடிக்கு மேல் வெள்ளம் தேங்கி நின்றது. இதனால் வெங்காயம் அழுக வேண்டிய நிலை ஏற்பட்டது.

விதை உருளைக் கிழங்கு கிடைக்காத போதும் வெளிநாட்டிலிருந்து பல லட்சம் ரூபாய் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கை பெற்று விதைத்திருந்த இப்பகுதி விவசாயிகள் வெள்ளம் காரணமாக விதை உருளைக் கிழங்கு அழுகிவிட்டதால் மீண்டும் விதைக்க கிழங்கு இல்லாது கஷ்டமுறுகின்றனர்.

இதேபோலப் புகையிலை வெற்றிலை மற்றும் உப-உணவுப் பயிர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

பயிர்களினால் ஏற்பட்ட நட்டங்களை அரசாங்கத்துக்கு தெரிவித்து நிவாரணம் பெறவிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இத்துடன் விவசாயத்துக்கென அரசாங்கத்திடம் பெற்ற கடனை எப்படிச் செலுத்துவதென்று தெரியாது தவிக்கின்றனர், விவசாயிகள்.

## 300 குடும்பத்தினர் பாடசாலைகளில் தஞ்சம்

குமரபுரம், சனி

கடந்த சில தினங்களாக இப்பகுதியில் பெய்த பெருமழை காரணமாகக் குடியேற்ற வாசிகளில் பலர் தமது குழந்தைகளுடன் குமரபுரம் இ. த. க பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளனர்.

இப்பகுதிக் காரியாதிகாரி திரு. இ. யோகநாதன், கிராம சேவகர் மகாலிங்கம், பட்டின சபைத்தலைவர் அ. ச. கந்தையா, 7ம் வட்டார உறுப்பினர் க. நடேசலிங்கம், பாடசாலை அதிபர் திரு. இ. த. சுப்பிரமணியம் ஆகியோர் அகதிகளுக்கு வேண்டிய உதவியை உடனுக்குடன் கவனித்து வருகின்றனர்.

அகதிகள் தொகை நாளுக்கு நாள் கூடிவருவதால் சமூகசேவைப் பகுதியினர் அளிக்கும் உதவிப்பணம் அன்றாடஉணவுக்குப்போதாமலிருப்பதால் கரைச்சிப் பிரிவிலுள்ள பிரமுகர்களான திரு என். கே. நல்லதம்பி, ஆ. க முருகேசு, அ. சிவசுந்தரம் பட்டினசபைத் தலைவர் அ. ச கந்தையா ஆகியோர் உட்பட இப்பகுதி மக்கள் [illegible] க்கி வைத்துக் கொள்ளை இலாபமடிப்பதாகவும் புகார் கூறப்படுகிறது.

### ஆனைக்கோட்டை பாதுகாப்புச் சபை

உடுவில், சனி

ஆனைக்கோட்டைப் பொலிஸ் பகுதியில் பொது நல பாதுகாப்புச் சபையொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டது. வடபகுதி பொலிஸ்சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் வேண்டுகோளின் பேரில் அமைக்கப்பட்ட இச்சபையில் மானிப்பாய், சுதுமலை, கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய ஊர்களிலிருந்து தலா இருபது பேர்கள் வீதம் நூறு அங்கத்தவர்கள் திரட்டப்பட்டுள்ளனர். திரு எம். வைரமுத்து தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேற்படி சபையின் தலைவராக திரு. எஸ். இராஜேந்திரம் (மானிப்பாய் பட்டினசபை தலைவர்) உப தலைவர் திரு. எஸ். மார்க்கண்டு (சுதுமலை கிராமசபை) செயலாளர் [illegible]

# பக்திப்பாடல் நூல்கள் இலவச விநியோகம்

## தமிழ் நாடு அரசு திட்டம்

சென்னை, ஜன. 3

திவ்யப் பிரபந்தம், தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப்பாடல்களை, சிறு சிறு புத்தகங்களாக அச்சடித்து இலவசமாக அனைவருக்கும் விநியோகிக்கவும், சிறுவர், சிறுமியர்களுக்கு இளம் வயதிலிருந்து மேற்படி பக்தி பாடல்களை சொல்லிக் கொடுத்து ஆரம்பத்திலிருந்தே நன்னெயுடறினும் பண்பாடுடையவர்களாக வளர்க்கவும் செய்ய தமிழ்நாடு அறநிலைய பாதுகாப்புத் துறை திட்டமிட்டு வருவதாக ஹிந்து அறநிலையபாதுகாப்புத்துறை கமிஷனர் திரு. கே. எஸ். நரசிம்மன் தெரிவித்தார்.

ஹிந்து தர்மம் பாதுகாக்கப்படவும் 'சமய ஞானத்தைப் பரவச் செய்யவும் பெருமை மிக்க தமிழகத் திருக்கோயில்களை செம்மையாக பாதுகாக்கவுமாக பல்வேறு திட்டங்களை அமுல் செய்ய தம்முடைய இலாகா விழிம்புவதாக அவர் கூறினார்.

தமிழ்நாட்டு தொன்மை வாய்ந்த கோவில்களின் உயரமான திருச்சுவர்களையும் கோபுரங்களையும் குறிப்பிட்டு நல்ல முறையில் பராமரிக்கப்படாமல் புல் பூண்டு செடிகள் அவைகளின்மீது வளந்து ஓரிரு ஆண்டுகளில் மரமாக ஆகி அதன் வேர்கள் பூமிவரை விட்டு முடிவில் அடியோடு அழிவுக்கு அடி கோலுகின்ற வெடிப்புகளை அச்சுவர்களில் ஏற்படுத்திவிடுகின்றன்றன.

ஆகவே சிறு செடிகளை சுலபமாக வெட்டியெறிய உதவியாக சிறு கோடாலிகளை ஐந்தாயிரம் செய்து அவைகளை தமிழ்நாடு எங்கும் உள்ள கோவில் நிர்வாகத்தினரிடம் தலைக்கு ஒன்றாக அளிக்கத் தன் இலாகா எண்ணியுள்ளதாகவும் அவர் கூறினார்.

பக்தி நூல்கள், ஹிந்து தர்ம நூல்கள் முதலியவை நன்கு பிரசாரம் செய்யப்படவேண்டியது அவசியம் என்று அவர் வற்புறுத்திவிட்டுக் கிராமங்களில் ஏழை எளிய குடும்பங்களில் பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் சென்றுவிடும் நேரத்தில் அவர்களின் ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை அழைத்து வந்து 'சிறுவர் இல்லத்தில்' வைத்துப் பராமரித்து, கோவில்களின் செலவில் அக்குழந்தைகளுக்குப் பகல் நேரங்களில் பால் ஊட்டவும், கோயில்களின் நைவேத்திய பிரசாதங்களை அவர்களுக்கு மதிய உணவாக அளித்து, தேவாரம், திருவாசகம், திவ்ய பிரபந்தம் போன்ற பக்திப்பாடல்களை அந்த இளம் பிராயத்திலிருந்தே ஓதுவார்களைக் கொண்டு அக்குழந்தைகளுக்குப் பயிற்றுவித்தால் தெய்வ பக்தியும், நன்நெறியும், பண்பாடும் குழந்தைகளுக்குச் சிறுவயதிலிருந்தே வந்து பிறகு நல்ல பிரஜைகளாக இருப்பார்களென்றும், இது பற்றியும் தன் இலாகா தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும் கமிஷனர் கூறினார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் அம்பாள் திருக்கோயில் திருப்பணிக்கு தமிழக அரசு லட்சம் ரூபாய் அளித்திருக்கிறதென்றும், திருப்பணி வேலைகள் வெகு சீக்கிரத்தில் துவங்க இருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதாகவும் அவர் அவித்தார்.

44-வது வருடாந்தர ஸ்ரீ வைஷ்ணவமகாநாட்டை கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் உள்ள உப்புடூர் ஆழ்வார் சத்திரத்தில் அறநிலைய பாதுகாப்புத்துறை கமிஷனர் கே. எஸ். நரஸிம்மன் துவக்கி வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

## திட்டமிட்டதற்கு முன்னர் திரு. பிலிப் யாழ் விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைத்தொழில், கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தன இம்மாதம் [illegible] திகதி யாழ்ப்பாணம் வருகின்றார். இம் மாதம் 21-ம் திகதியே இவர் யாழ்ப்பாணம் வருவதாக [illegible] பிலிப் கைத்தொழில், கடற்றொழில் ஊழியர்கள், தொழிற்சங்கங்களுடன் பல்வேறு பிரச்னைகள் பற்றியும் ஆலோசனை நடாத்துவார் என்றும் செயலக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சொன்னார். (கா. நி.)

# காங்கேசன்துறையில் 3 சிங்கள ஆசிரியர் நியமனம்

காங்கேசன்துறை, சனி

காங்கேசன்துறை ஆங்கில மகாவித்தியாலயத்தில் சிங்கள வகுப்புகள் இம்மாதத்திலிருந்து நடைபெறவிருக்கின்றன. இதற்கான மூன்று ஆசிரியர்கள் கல்விப் பகுதியினரால் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 8-ம் திகதியிலிருந்து சிங்களப் பாடம் இங்கு போதிக்கப்படும். ஒரு தலைமையாசிரியருடன் இரண்டு உதவி சிங்கள ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அறுவடை செய்யவிருந்த நெல் மீண்டும் முளைத்து விட்டது

### அனலைதீவு விவசாயிகள் கவலை

அனலைதீவு, சனி

அறுவடை செய்யப்பட வேண்டிய பருவத்திலிருந்த நெற்பயிர் முழுவதும், கடந்த சில தினங்களாகப் பெய்த பெரும் மழையினால் திரும்பவும் முளைக்கத் தொடங்கிவிட்டதாக இப்பகுதி விவசாயிகள் பலர் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் அறுவடை செய்யப்படவிருந்த நெற்பயிர்கள் முழுவதும் இங்கு நாசமாகிவிட்டன. பல வருடங்களாக நெற்பயிர் விளைவிக்காமலிருந்த இப்பகுதி விவசாயிகள் புகையிலை செய்வதையே தங்கள் வழக்கமான தொழிலாகக் கொண்டிருந்த போதிலும், கடந்த ஓரிரு வருடங்களாக நெல்லையும் விளைவிக்கத் தொடங்கினர். தீவுப்பகுதியில் ஏனைய இடங்களைவிட இங்கு நெல் நன்றாக விளைந்திருந்தது. ஆயினும் அது வாய்க்கு எட்டவில்லையே என இப்பகுதி விவசாயிகள் பலரும் விசனம் தெரிவித்தனர்.

நெல் வயல்கள் எல்லாம் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன பிரதான வீதிகள் குறுக்கே வெட்டப்பட்டு வெள்ளம் வடியவிடப்பட்டுள்ளது. இப்பகுதி விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணம் வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாமல், பயிர் நட்ட ஈடும் வழங்கவேண்டுமெனக் காரியாதிகாரி மூலம் சமூக சேவைப் பகுதியினரிடம் வற்புறுத்தப்படவிருக்கிறது.

## ஆசிரியர் முன்னேற்றம் ஆராய கருத்தரங்கு

மாவிட்டபுரம், சனி

ஆசிரியர்களின் முன்னேற்றத்தையிட்டு பல ஆசிரிய சங்கங்கள் ஒன்றுசேர்ந்து அமைத்துள்ள கூட்டுச்சபை, இம்மாத நடுப்பகுதியில் ஒரு கருத்தரங்கை நடத்தவிருக்கிறது.

யாழ். நகரிலுள்ள ஆசிரியர்களின் உரிமைகளைப்பெற ஒரே குரலில் போராடுவதற்கென அரசினர் பாடசாலை தமிழாசிரியர் சங்கம், இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், உயர்தர பயிற்றப்பட்டஆசிரியர் சங்கம். வடமாகாண ஆசிரியர் சங்கம், ஜாதிக குரு சங்கம், வடமாகாண ஆசிரியர் சங்க தனியார் பிரிவு ஆகியன சேர்ந்து கூட்டுச்சபை ஒன்றை அமைத்திருந்தன.

இக்கூட்டுச்சபையின் முதலாவது திட்டமாக ஆசிரியர்கள் யாவரும் பங்குபற்றும் கருத்தரங்கு நடத்தப்படவிருக்கிறது.

ஆசிரியர் உரிமைகளைப் பெறும் வகையில் சங்கங்கள் தனித்துநின்று போராடாமல் ஒன்றாகச் சேர்ந்து போராடவே இக்கூட்டுச்சபை அமைக்கப்பட்டதாக கூட்டுச்சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்தவருடம்

## 726 கொலைகள்; 612 கோரவிபத்துக்கள் நடந்தன

கோட்டை, சனி

1969-ம் ஆண்டில் 726 கொலைகளும், 1968-ம் ஆண்டில் 723 கொலைகளும்நிகழ்ந்துள்ளன. 1969 டிசம்பர் மாதத்தில் மட்டும் 65 கொலைகளும் 1968-ம் ஆண்டு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கைகளில் புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டுள்ளது. புத்தகங்களை வழங்குவதற்கான பட்டியல்களை பாடசாலை அதிபர்களிடமிருந்து கோரியுள்ளது, வட்டார வித்தியாதிகாரி முலம் இப் புத்தகங்கள் மாணவர்களிடம் கையளிக்கப்படும் எனமேற்படி சழகச் செயலாளர் திரு சு. யோ. பூராசா தெரிவித்தார்.


நடித்த

உயிரா மானமா

வல்வெட்டித்துறை

றஞ்சனு தியேட்டர்

தினசரி: 6-30, 9-30

போயா, பிரிபோயா 3 காட்சிகள்

சிவாஜி-பத்மினி கே ஆர்விஜயா

நடித்த

இருமலர்கள்


...திரு என். கே. நல்லதம்பி, ஆ க முருகேசு, அ. சிவசுந்தரம் பட்டினசபைத் தலைவர் அ ச கந்தையா ஆகியோர் உட்பட இப் பகுதி மக்கள் சிலர் ஒருவராகத் தமது சொந்தச் செலவில் அகதிகளுக்கு உணவளித்து வருகிறார்கள்.

வயல்கள் நீரில் மூழ்கிக் கிடக்கின்றன. குடியேற்றப் பகுதி வீதிகள் முற்றாகச் சேதமடைந்து விட்டன. கால் நடைகள் ஆங்காங்கே இறந்து கிடக்கக்காணப்படுகின்றன.

இப் பகுதியிலுள்ள சில வியாபாரிகள் பிரதான உப உணவுப்பொருட்களைப் பது...

...சபை... தலைவராக திரு. எஸ். இராஜேந்திரம் (மானிப்பாய் பட்டினசபை தலைவர்) உப தலைவராக திரு. எஸ். மார்க்கண்டு (தலைவர், சுதுமலை கிராமசபை) செயலாளராக திரு. ஏ. எஸ். ஐயாத்துரை (ஆசிரியர் மெமோரியல் பாடசாலை மானிப்பாய்) உப செயலாளராக திரு. கே. ஞானபண்டிதர், தனாதிகாரியாக திரு. சி. மயில்வாகனம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக ஐந்து அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

...கைத்தொழில், கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தனு இம்மாதம் 19-ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார். இம்மாதம் 21-ம் திகதியே இவர் யாழ்ப்பாணம் வருவது ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அச்சுவேலியில் அமைக்கப்படவிருக்கும் கைத்தொழில் பேட்டைக்கான அத்திபாரக்கல்லை அமைச்சர் தனதுவிஜயத்தின்போது நாட்டிவைப்பார்.

இரண்டு தினங்கள் மட்டுமே யாழ்ப்பாணத்தில் தங்கிநிற்கும் அமைச்சர் தொழில் ஊழியர்கள், தொழிற்சங்கங்களுடன் பல்வேறு பிரச்னைகள் பற்றியும் ஆலோசனை நடாத்துவார் என்றும் செயலக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சொன்னார். (கா. நி.)

— —

யாழ்ப்பாணம், ஞாயிறு

சோவியத் நூல் கண்காட்சி ஒன்று இம்மாதம் 6-ம்திகதி முதல் 9-ம் திகதி வரை யாழ்ப்பாணம்பொது நூல் நிலையத்தில் நடைபெறும்- பிரதி தினமும் மாலையில் சோவியத் படக்காட்சி இடம்பெறும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

## கோரவிபத்துக்கள் நடந்தன

கோட்டை, சனி

1969-ம் ஆண்டில் 726 கொலைகளும், 1968-ம் ஆண்டில் 723 கொலைகளும்நிகழ்ந்துள்ளன. 1969 டிசம்பர் மாதத்தில் மட்டும் 65 கொலைகளும்1968-ம் ஆண்டு டிசம்பரில் 67 கொலைகளும் நிகழ்ந்துள்ளன. சென்றுண்டு ஏப்ரல் மாதத்தில் 74 கொலைகள் நடைபெற்றுள்ளன. இது கடந்த பன்னிரண்டு மாதங்களில் நடந்த அதிகமான கொலைகளாகும். பொலிஸ் இலாகா வெளியிட்டுள்ள புள்ளி விபரமொன்றிலிருந்து இவை தெரியவந்தன.

சென்றுண்டில் 584 கோர விபத்துக்கள் நிகழ்ந்தன. இதில் 612 பேர் இறந்துள்ளனர். 1968-ம் ஆண்டில் 532 கோர விபத்துக்களில் 542 பேர் இறந்துள்ளனர். கடந்த டிசம்பரில் மட்டும் 44 கோர விபத்துக்களும் 1968 டிசம்பரில் 43 கோரவிபத்துக்களும் நிகழ்ந்துள்ளன.


ராணி (யாழ்ப்பாணம்)

[தினசரி 4 காட்சிகள்]

எம். ஜி. ஆர் - ஜெயலலிதா

அசோகன் - சோ - சந்திரபாபு

நடித்த

அடிமைப்பெண்

மனேகரா

யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர்.- ஜெயலலிதா

நடித்த

அடிமைப்பெண்

பல்கனி ஆசனங்கள் பதிவுசெய்ய விரும்புவோர் மனேச்சருடன் தொடர்புகொள்ளவும்

தொலைபேசி இல: 485


## புதிய பொலிஸ் பகுதிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் பொலிஸ் நிலையத்தின் நிர்வாகத்தின்கீழ் கோப்பாய் பொலிஸ் விரைவில் சேர்க்கப்படவிருக்கின்றது.

திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி தெற்கு, நல்லூர் மார்க்கட், நாயன் மார்கட்டு, முத்திரைச் சந்தை ஆகிய இடங்கள் விரைவில் நல்லூர் பொலிஸ் நிலையத்துடன் சேர்க்கப்படும்.

மாங்குளத்தில் கட்டப்பட்டுவரும் புதிய பொலிஸ் நிலையமும் மார்ச் மாதம் முதலாம் திகதி திறந்து வைக்கப்படவிருக்கின்றது. (கா நி)

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 20-ம் திகதி 4-1-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- எதிர்பார்த்த முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை உருவாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் கவலைப்படுவீர்கள். பெரியவர் ஒருவர் ஆறுதலளிக்க முன்வருவார். அடக்கம் விரும்பத்தக்கது.

**ரிஷபம்**- வாழ்க்கையில் தென்றல் வீசும். காதல் சிட்டுகளுக்குக் கனிவான தினம். கணவன் மனைவி உறவு அன்புகொண்டதாக இருக்கும். மற்றவர்களின் கவனத்தைத் திருப்புவதில் வெற்றியடைவீர்கள். சுகபோக தினம்.

**மிதுனம்**- இன்னலின் பின்னலால் இதயபாரம் அதிகரிக்கும். முதியவர் ஒருவரின் உடல்நலம் கவலையைத் தரலாம். வைத்தியச்செலவுகளுக்கும் இடமுண்டு. சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத நஷ்டமும் ஏற்படலாம்.

**கடகம்**- புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும். ஏழைகளுக்கு இரங்குவதில் முன்னிற்பீர்கள். தெய்வகுருபக்திக்கும் இடமுண்டு. மற்றவர்கள் உங்களைப் பின்பற்றக்கூடிய சூழ்நிலை உருவாகும். நல்லநாள்.

**சிம்மம்**- பூமிவிருத்தியுடன் புதிய தொடர்புகளும் பெருகும். அரசாங்க ஊழியராயின் உத்தியோகஉயர்வுக்கு இடமுண்டு. சிலர் வாழ்க்கையில் வெளிநாட்டுப் பயணமொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

**கன்னி**- முயற்சியின் மூலம் முதலிடத்தைப் பிடித்துக்கொள்ளுவீர்கள். பலவழிகளிலும் பணம் கைவந்து சேரும். உற்சாகமளிக்கும் செய்தியொன்று கிடைக்கலாம். வியக்கத்தக்க சாதனையொன்று நிலைநாட்டப்படலாம்.

**துலாம்**- கண்துடைப்பு வேலை நடைபெறும். கால் நடைகளினுல் நஷ்டமுண்டு. குடும்பத்தில் உறவுமுறை திருப்திகரமற்றதாக இருக்காது. மூத்த சகோதரத்தின் நடவடிக்கை வேதனையைத் தரும். மட்டமான தினம்.

**விருச்சிகம்**- கரும்பாக இனித்தது, இன்று வேம்பாகக் கசக்கக்கூடும். மனப்போராட்டங்களினுல் வேதனைப்படுவீர்கள். அதிக முயற்சி எடுத்தாலும் அற்பஇலாபமே கிடைக்கும். முன்னெச்சரிக்கைவேண்டும்.

**தனுசு**- கன்னல் மொழிமூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள். கவர்ச்சிகரமாக உடைஅணிவதற்கு விரும்புவீர்கள் ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் ஆதரவு கொடுப்பதற்கு முன்வருவார்கள். பொருள்வரவும் உண்டு.

**மகரம்**- துஷ்டர்கள் உறவு உங்களைச சங்கடத்தில் மாட்டிவைக்கும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. வழக்குவிவகாரங்களைத்தவிர்த்துக்கொள்ளவும். உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

**கும்பம்**- மதிவழி நடப்பின் மற்றவர்கள் பொறுமைப்படும் அளவுக்கு முன்னேற்றமுண்டு. அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். சிறப்பானதினம்.

**மீனம்**- சூழ்நிலையில் நல்ல மாறுதல் தென்படும். அமைதியான வாழ்க்கையுடன் தெய்வத்தின் அருளும் தாராளமாகக் கிடைக்கும், தொழில்துறையிலும் பாராட்டுக்கள் கிடைக்கும். எல்லாம் இன்பமயம்.

## பூந்தோட்டங்களை பார்வையிடுகின்றனர்

ஹட்டன், சனி

இத்தாலி தலைநகரான ரோமாபுரியின்பூந்தோட்டம் மன்றத்தைச் சேர்ந்த 35 அங்கத்தவர்கள் இலங்கையிலுள்ள பூந்தோட்டங்கள் உள்ள பகுதிகளைச் சுற்றிப் பார்க்க வந்துள்ளனர்.

திரு. சிட்டாகிரி தலைமையில் வந்த மேற்படி குழுவினரை ஹட்டன் தோட்ட உரிமையாளரான திருமதி பெர்ஞண்டோ வரவேற்று உபசரித்தார். இவர்களை வரவேற்றுப் பேசிய திருமதி பெர்ஞணடோ, பூந்தோட்ட அபிவிருத்திக்குஇலங்கையில் போதிய வசதிகள் இல்லையெனவும் அவ்வாறிருந்தும் கிடைப்பதைக் கொண்டு ஓரளவு வெற்றிகரமாகச் செய்துவருவதாகவும் குறிப்பிட்டார்: மேற்படி குழுவினர் இலங்கையிலுள்ள பூந்தோட்டங்களைப் பார்வையிட்டு வருகின்றனர்.

— —

## பரீட்சைக்கு தோற்றவில்லையா?

### அறிவியுங்கள்

கோட்டை, சனி

சமீபத்தில் நடைபெற்ற ஜீ. சீ ஈ. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் வெள்ளம் காரணமாகத் தங்கள் பரீட்சையை எழுதத் தாமதம் ஏற்பட்டிருந்தால் அதைஉடனடியாக அறிவிக்கும் படி நாட்டிலுள்ள சகல பிராந்திய கல்வி அதிபர்களுக்கும் பரீட்சை பகுதி ஆணையாளர் டாக்டர். கே. ரி. டபிள்யூ. சுமணசூரிய அறிவித்துள்ளார்.

## தமிழ்ச்சங்க நிர்வாகிகள்

பம்பலப்பிட்டி, சனி

கொழும்புத் தமிழ்ச்சங்க நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. நடப்புவருட நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

காப்பாளர் திரு. இ. சபாநாயகம் தலைவர் திரு கு. பாலசிங்கம், பொதுச் செயலாளர் திரு ச. சரவணமுத்து, பொருளாளர் திரு வை. பொன்னுச்சாமி, துணை காப்பாளர்களாக 15பேரும் துணைத்தலைவர்களாக 16 பேரும் குழு உறுப்பினர்களாக 30 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பருத்தித்துறை

### ந. ச. தலைவர் தெரிவு

காங்கேசன்துறை, சனி

பருத்தித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு இம்மாதம் 7ம் திகதி நடைபெறவிருக்கிறது.

ஒன்பது வட்டாரங்களைக் கொண்ட பருத்தித்துறை நகரசபையின் முன்னுள் நகரசபைத் தலைவருக்கும் ஏற்றும் ஒருவருக்குமிடையே போட்டியிருப்பதாகத் தெரிகிறது.

## ஜனவரி 15-ல் நியமனங்கள் வழங்கப்படும்

கோட்டை, சனி

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும்சேவை செய்யத் தெரிந்தெடுக்கப்பட்ட மாணவ ஆசிரியர்களுக்கும் ஆங்கில உதவி ஆசிரியர்களுக்கும் ஜனவரி 15-ம் திகதியிலிருந்து நியமனங்கள் வழங்க கல்வி இலாகா தீர்மானித்துள்ளது.

## விவசாயிகள் கவலை

உருத்திரபுரம், சனி

இப்பகுதியில் எங்கும் வெள்ளக்காடாகாவ காட்சியளிக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிவநகர் மக்கள் பாடசாலைகளிலும் கோவில்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

உணவு உற்பத்தி பயிர்கள் வெகுவாகப் பாதித்துவிட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.


5வது வெற்றி வாரம்


வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

பிரிபோயா, போயா 4 காட்சிகள்

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]

ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி

★ ஜெமினி ★ சாவித்திரி

★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா

★ நாகேஷ் ★ மனோரமா

நடித்த

திருவருட் செல்வர்

[ஈஸ்ட்மென் கலர்]

REGAL JAFFNA

Daily 4-45, 7 &9-45, p.m

Poya, Pre-Poya 4 shows

George Peppard.

Inger Stevens

In

'HOUSE OF CARDS'

(Scope-Color)

இன்று மட்டும்

வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி நான்கு காட்சிகள்

நாகேஷ், விஜயநிர்மலா

விரப்பன், சகஸ்ரநாமம்

மற்றும் பலர் நடித்த

சோப்பு, சீப்பு, கண்ணாடி

(சிறந்த நகைச்சுவைச் சித்திரம்)

நாளை முதல்

★ சிவாஜிகணேசன்

★ சரோஜாதேவி

நடித்த

அஞ்சல்பெட்டி 520



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனுன் கிராமங்கள் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல்

## எச்சரிக்கை விடுத்தபின் நடவடிக்கை

பேரூட், ஜன. 3

லெபனுன் கிராமங்கள் மீது இஸ்ரேல் விமானங்கள் பலதடவைகள் கடும் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன.

லெபனுன் எல்லையிலிருந்து கொண்டு இஸ்ரேல் நிலைகள் மீது பாலஸ்தீன கொமாண்டோக்கள் தாக்குதல்கள்மேற்கொண்டுவருவதைக் கட்டுப்படுத்தும்படி இஸ்ரேல் சில நாட்களாகவே லெபனுன் அரசை வற்புறுத்தும்படி கேட்டுவந்தது. கொமாண்டோ தாக்குதல்களைக்கட்டுப்படுத்தாவிட்டால் அதனுல் வரும் விளைவுகளை எதிர்நோக்கும்படியும் இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துவந்தது.

நேற்று இருதடவைகள் ஒரு கிராமத்தின்மீது இஸ்ரேலிய விமானங்கள் நடத்திய தாக்குதலில் 9 பேர்காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதல்கள்பற்றி இஸ்ரேல் ஊர்ஜிதம் செய்யவில்லை. என்றுலும் மீண்டும் லெபனுனுக்கு அது எச்சரிக்கை விடுத்துள்ளது.

லெபனுன் தனது பிரதேசத்தைப் பாதுகாப்பதில் உறுதியாக நிற்கும் என்றும்எதிர் விளைவுகளைப் பற்றிக் கவலையில்லை என்றும் லெபனுன் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்திருக்கிருர்.

சூயஸ்கால்வாயின் மேற்குகரைப்பகுதியிலும் நேற்று இஸ்ரேலிய விமானங்கள் பறந்து குண்டுவீசின. ஆனுல் இஸ்ரேலிய விமானம் ஒன்றைச் சுட்டுவீழ்த்தியதாகவும் மற்றவிமானங்களைத் துரத்தியடித்ததாகவும் எகிப்தியர் கூறினுர்கள். தாக்குதல் நடத்திய தங்கள்விமானங்கள் யாவும் பத்திரமாகத் திரும்பிவந்ததாக இஸ்ரேலியர் அறிவித்தனர்.

பிரஞ்சுத் துறைமுகத்திலிருந்து மர்மமாகப் புறப்... சிலிருந்து வெளியேறும்படி கோரப்பட்டுள்ளஇஸ்ரேலிய வர்த்தக குழுவின் தலைவர் ஜெனரல் லிமோன் தாம் பெரிதும் கவலையடைந்திருப்பதாகக் கூறியிருக்கிருர். பிரான்சில் தாம் இதுவரை 6 கோடி ரூபாய் மதிப்புக்கு ரப்பர் கொள்முதல் செய்திருப்பதாக அவர் கூறினுர்.

## "விதை உருளைக்கிழங்கு வெங்காயம் வழங்குக"

### கோப்பாய் எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாய் பகுதியில் உருளைக் கிழங்கும், வெங்காயமும் அழுகிப்போய் விட்டதால், விதை உருளைக்கிழங்கும், விதை வெங்காயமும் தந்துதவும்படி யாழ். அரசாங்க அதிபரையும் பிரதமரையும் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையும், கோப்பாய் கிராம சபைத் தலைவர் திரு. ரி. பரமானந்தராசாவும் கோரியிருக்கிருர்கள்.

இப்பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொருட்களாக வழங்காமல், பணமாக நிவாரணம் வழங்கும்படி பிரதமரையும், அரசாங்க அதிபரையும் கோப்பாய் எம். பி. யும், கோப்பாய் கிராமசபைத் தலைவரும் கோரியிருக்கிருர்கள்.

## தென்மராட்சி, பச்சிலைப்பள்ளியில் நெல்வயல்கள் சேதமில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுமார் இரண்டு வாரகாலம் வடக்கில் தொடர்ந்து பெய்த மழையால் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி பிரிவுகளில் நெல்வயல்கள் எதுவுமே சேதமடையவில்லை.

இப்பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் இத்தகவலைத் தெரிவித்தார்.

வெள்ள நிலைமை காரணமாக உணவுற்பத்தி பாதிப்புக்கள் பற்றிப் பார்வையிட திரு முருகேசம்பிள்ளை தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி பிரிவுகட்கு நேற்றுமுன் தினம் சென்றிருந்தார்.

தென்மராட்சி 24 குடும்...

## ஆற்றைக் கடந்தவர் மரணம்

முசலி, சனி

முசலிக் காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த புளியடியிறக்கம் (மடுரேட்) கிராம சேவையாளர் பிரிவில் மடுரேட்டிலிருந்து ஒருவர் ஆற்றைக் கடந்துவந்து கொண்டிருந்தபோது ஆற்றில் சிக்கி மரணமானுர்.

நானுட்டான் கிழக்கு திடீர் மரணவிசாரணையதிகாரி திரு. ஜே. வி கிருபைரெட்டினம் விசாரணை நடத்தினுர். நீரில் மூழ்கி மூச்சுத்திணறியதினுல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது

விவசாய அதிகாரி...

## ஆட்சி மொழிபற்றி காந்திஜி கூறியது என்ன?

### எல்லைக்காந்தி விளக்கம்

சென்னை, ஜன. 3

தேசத் தலைவர்களில் சிலராவது பதவிகளில் அமராது வெளியே இருந்துகொண்டு ஆட்சிபீடத்தில் இருப்பவர்களுக்கு வழி காட்டவேண்டும். அவ்வாறு வெளியே உள்ள தலைவர்கள் மக்களுடன் நேரடி தொடர்பு கொண்டு நாட்டின் புரத்யட்ச நிலைமைகளையும், மக்களின் தேவைகளையும் அறிந்துணர்ந்து ஆட்சியினருக்கு தெரிவித்து வழி காட்டவேண்டும் என்று கான் அப்துல்கபார்கான்புதன்கிழமையன்று தன்னைக் காண வந்த தமிழ்நாடு காந்திய ஊழியர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஹரிஜன மக்களுக்கு அரசு உதவி செய்துங்கூட ஹரிஜனங்கள் இன்னும் ஜாதி ஹிந்துக்களிடம் அல்லற்படுவதாக மேற்படி ஊழியர் கூட்டத்தைச் சேர்ந்தவரும் பழம்பெரும் காந்தீயவாதியுமான திரு. சங்கு சுப்ரமணியம் குறிப்பிட்டபோது, காந்தீய போதனைகளை கபார்கான் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புவதாகக் கூறினுர்.

தன்னுடைய சொத்து சுதந்திரங்கள் முதலிய சகலமும் பாகிஸ்தானில் இழந்துவிட்டதை அவர் சுட்டிக்காட்டி உங்களுக்கோ, உங்கள் சொத்துக்களுக்கோ, உங்கள் பந்துமித்திரர்களுக்கோ என்ன இழப்பு ஏற்பட்டாலும் பொருட்படுத்தாது காந்தீய வழியில் நீங்கள் தொடர்ந்து பாடுபடுவதே இதற்குள்ள நிவர்த்தி வழி'' என்று திரு கபார்கான் கூறினுர்.

### தேசியமொழி

தட்சிண பாரத் ஹந்தி பிரசாரசபை சார்பில் அதன் தலைவர் திரு. ஏ. வி. கௌடி ... திரு. ஏ. வி. காமு... சிரான ... விபோ... அதிகாரி திரு. எஸ். ... ஹிந்தியையல்ல என்று பாத்ஷாகான் சுட்டிக்காட்டினுர்.

மேற்படி சந்திப்புகள் புதன்கிழமையன்று கிண்டி ராஜ்பவனில் நடைபெற்றன

நகரிலுள்ள பல பிரமுகர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் கபார் கானைச் சந்தித்தனர். நகரிலுள்ள பல பட்டானியவகுப்பு மக்கள் சுமார் முப்பதுக்குமேற்பட்டவர்கள் பெண்கள் உட்படத் தங்கள் இனத்தலைவரும், 'குருவுமான' அவரைச் சந்தித்துத் தங்களது வணக்கத்தைத் தெரிவித்தனர்.

சுதந்திரப் போராட்ட நாட்களின் போது எல்லைக்காந்தி ஆரம்பித்த பாரத சேவாதள தொண்டர்படை அமைப்புப் போன்று குதாய் கித்மத்கார் (செஞ்சட்டைப் படை) இயக்கத்தின் தென்னகத் தலைவரும், கபார்கானின் நெடுநாளைய நண்பருமான ஆம்பூர் மௌலானு மவுலி ஹக்கீம் பஜுலுல் ரஹ்மான் சாகிப், அவருடைய குடும்பத்தாருடன் வந்து எல்லைக்காந்தியைச் சந்தித்தபோது இருவரும் மனம் நெகிழ்ந்தனர்.

சுதந்திர இயக்கத்தில் தன் சகல உடைமைகளையும் இழந்ததாகவும், ஆனுல் மத்திய அரசு தங்களை (குதாய் கித் மத்கார் படை கைவிட்டு விட்டதாகவும் அவர் முறையிட்டபோது பக்தூன் மக்களின் கோரிக்கைகளை இந்திய சர்க்கார் கைவிட்டுவிட்டதாக அவரும் ஒப்புக்கொள்வதாகக் கூறினுர்.

## 39 மொழிகளில் பி. பி. ஸி. சேவை

லண்டன், ஜன. 3

பிரிட்டிஷ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் (பி. பி. ஸி.) வெளிநாட்டு சேவைகள் தமிழ், சிங்களம் உ... 39 மொழிகளில் நடத்தப்...

# படித்த பெண்கள் நாட்டுக்கு வழிகாட்ட வேண்டும்

## தமிழ் நாட்டில் எல்லைக்காந்தி

சென்னை, ஜன 3

தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து வரும் எல்லைகாந்தி கான் அப்துல் கபார்கானுக்கு சென்னையில் ஒரு லட்சம் ரூபாய் பண முடிப்பு ஒன்று வங்கப்பட்டது. இந்தப் பண முடிப்பை தமிழ் நாடு முதல்வர் திரு. மு. கருணுநிதி வழங்கினுர்

சென்னை மாநகரசபையின் ஆதரவில் எல்லைக்காந்திக்கு அளிக்கப்பட்ட பொது வரவேற்பின் போது இந்தப் பண முடிப்பு வழங்கப்பட்டது. திரு. கருணுநிதி தலைமைவகித்தார். சென்னை மேயர் திரு. பாலசுந்தரம் வரவேற்பிதழ் வாசித்தார்.

இந்தவிழாவில்திரு, கருணுநிதி பேசுகையில் எல்லைக் காந்தி தமது வாழ்க்கையை தியாகத்திற்கு அர்ப்பணித்து வருகிருர். உலகம் முழுவதுமே எல்லைக்காந்தியை விட சிறைக்கொடுமைகளை அனுபவித்த தலைவர் எவருமே இல்லை. அவரது கால்களில் விலங்குமாட்டியது மட்டுமன்றி கைகள் கழுத்திலும் விலங்குகளை மாட்டி சங்கிலியால் பிணைத்துக் கொடுமை புரிந்தார்கள். அவரது தியாக வாழ்க்கை தன்மான உணர்வின் மீதே ஆரம்பமாயிற்று. இராணுவத்தில் அந்தஸ்து மிகுந்த பதவி காத்திருந்த வேளையில் ஆங்கிலேயர் இந்திய அதிகாரிகளைப் பார்த்துப் பேசிய கிண்டல் மொழிகளைக் கேட்டு விண்ணப்பபத்திரத்தை கிழித்து வீரஉணர்ச்சி காட்டியதை நாம் படித்து அறிந்திருக்கிறேம். எல்லைக் காந்திக்கு இந்திய மக்கள் கொடுத்திருப்பது ஒரு சில லட்சம் ரூபாய்கள் மட்டுமல்ல நமது மக்களின் பல கோடி இதயங்களையும்அவர் எடுத்துச் செல்கிருர் என்ருர்

எல்லைக்காந்தி இந்த விழாவில் பதிலளிக்கையில் இந்தியாவில் உள்ள நிலைமைகள் பெரும் வருத்தத்தைக் கொடுக்கின்றன. காந்தி காட்டிவிட்டுச் சென்ற வழியைப் பின்பற்றி நடக்கத் தவறி விட்டோம். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக அவர் பாடுபட்டவர் ஆனுல் இப்போது பல இடங்களில் வகுப்புக் கலவரங்கள் நடக்கின்றன. உங்கள் பகுதியில் வேண்டுமானுல் அந்தத் தொல்லை இல்லாமல் இருக்கலாம் ஆனுல் நாடு முழுவதும் உள்ள நிலைமை மகிழ்ச்சிதருவதாய் இல்லை. என்ருர்.

எல்லைக்காந்திகான் அப்துல் கபார்கான் கடந்த 30-ம் திகதி சென்னை வந்து சேர்ந்தார். அவரை விமான நிலையத்தில் தமிழ்நாடு கவர்னர் உஜ்ஜல்சிங், முதல்வர் திரு. மு கருணுநிதி ஆகியோர் வரவேற்றனர். எல்லைக் காந்தி விமானத்திலிருந்து இறங்குகையில் ஒரு மூட்டையுடன் இறங்கிவந்தார்.

### ராஜாஜி சந்திப்பு

எல்லைக் காந்தி சென்னை வந்து சேர்ந்த அன்று மாலையிலேயே திரு. சி. ராஜகோபாலாச் சாரியாரின் இல்லத்துக்குப் போய் அவரைச் சந்தித்து குசலம் விசாரித்தார். ராஜாஜி சந்தனமாலை அணிவித்து அவரை வரவேற்ருர். இருவரும் தனிஅறையில் 10 நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பின்னர் முன்னுள் ஜனுதிபதி டாகடர் ராதா கிருஷ்ணனையும் அவர் போய் பார்த்தார்.

படித்த பெண்கள்கிராமங்களுக்குப் போய் நாட்டை ஆளசரியான நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மக்களுக்குப் போதிக்க வேண்டுமென்றுகான் அப்துல்கபார்கான் ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற மாதர்கள் கூட்டமொன்றில் கூறினுர்.

நாட்டை ஆளசரியான நபர்களை தேர்ந்தெடுப்பதற்கு வழிகாட்டும் பணியை படித்த ஆண்களும் பெண்களும் மேற்கொள்ள வேண்டுமென்ருர் அவர்.

# காங்கிரஸ், கொடி, சின்னம் சொத்து: அடுத்த போராட்டம் ஆரம்பம்

புதுடில்லி, ஜன. 2

காங்கிரஸ் கட்சியின் சின்னங்கள் கொடி, சொத்து ஆகியவற்றுக்கான அடுத்த போராட்டம் ஆரம்பமாகியிருக்கின்றது.

'சின்டிகேட்' காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பாவும் இந்திராசார்பு காங்கிரஸ் தலைவர் திரு ஜெகஜீவன் ராமும் இந்தச்சொத்துக்கள் தம் கட்சிக்கே சேர வேண்டுமென்று உரிமை கொண்டாடுகிருர்கள். பெரும்பான்மை ஆதரவு உள்ள பக்கம் சொத்துக்களும் சேரவேண்டுமென்பதில் இரு தலைவர்களுக்கும் உடன்பாடு இருக்கின்றது. ஆனுல் இருவருமே தங்கள் பக்கம்தான் பெரும்பான்மை ஆதரவு இருக்கிறது என்று வற்புறுத்துகிருர்கள்.

இந்திரா சார்பு காங்கி...

நிஜலிங்கப்பா கூறினுர். தேர்தல் சின்னத்தைக் கோருவதற்கு புதிய காங்கிரஸிற்கு உரிமையில்லை என்று கூறிய அவர் எதிலும் தேர்தல் கமிஷன்தான் முடிவுக்கு வரவேண்டும் என்ருர்.

## கி. ச. தலைவர் கோரிக்கை

உடுவில், சனி

உடுவில் கிராமசபைப் பகுதியில் மோசமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 4-ம் வட்டார சங்குவேலிப் பகுதி...

உடுப்பிட்டி கி.ச

## வரவு-செலவுத்திட்டம் நிறைவேறியது

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டிக் கிராமசபையின் 1970-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம்சபை...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

துரத்தியடித்ததாகவும் எகி
ப்தியர் கூறினர்கள். தாக்
குதல் நடத்திய தங்கள்விமா
னங்கள் யாவும் பத்திரமா
கத் திரும்பிவந்ததாக இஸ்
ரேலியர் அறிவித்தனர்.

பிரஞ்சுத் துறைமுகத்திலி
ருந்து மர்மமாகப் புறப்
பட்டு இஸ்ரேல் வந்து சேர்
ந்துள்ள ஐந்து பீரங்கிப்
படகுகள் விவகாரம் சம்பந்
தமாக பிரஞ்சு அரசாங்கம்
தீவிர விசாரணையொன்றை
ஆரம்பித்திருக்கின்றது.
இந்த விவகாரத்தில் தமக்கு
சம்பந்தமில்லையென்று இஸ்
ரேலிய அரசு அறிவித்திருக்
கின்றது. இதுபற்றிய விசா
ரணையில் ஒத்துழைக்கும்படி
நோர்வே அரசாங்கத்தை
பிரான்ஸ் கேட்டிருக்கிறது.
நோர்வே தூதுவரை பிர
ஞ்சு மந்திரிகள் சந்தித்துப்
பேசியிருக்கின்றனர்.

பீரங்கிப்படகுகள் விவகா
ரத்தில் சம்பந்தப்பட்டவர்
என்று கருதப்பட்டு பிரான்

புக்கள் பற்றிப் பார்வையிட
திரு முருகேசம்பிள்ளை
தென்மராட்சி, பச்சிலைப்
பள்ளி காரியாதிகாரி பிரிவு
கட்கு நேற்று முன் தினம்
சென்றிருந்தார்.

தென்மராட்சி 24 குடும்
பங்கள் மட்டுமே வீடுகளிலி
ருந்து வெளியேறியுள்ளனர்
ஆனால் பல வீடுகளின் சுவர்
கள் வெள்ளத்தால் வீழ்ந்
துள்ளன.

, பச்சிலைப்பள்ளி மருதங்
கேணிப் பகுதியில் சுமார்
200 குடும்பங்கள் வெள்ளத்
திலிருந்து வெளியேறியுள்
ளன

இரு இடங்களிலும் நெல்
வயல்களோ, உப உணவுற்
பத்தித் தோட்டங்களோ
எந்த அளவிலும் சேத
மடையவில்லையென திரு.
முருகேசம்பிள்ளை சொன்
னர். (கா. நி.)

காரி திரு. ஜே. வி. இருபை
ரெட்டினம் விசாரணை
நடத்தினர். நீரில் மூழ்கி
மூச்சுத்திணறியதினல் ஏற்
பட்ட மரணமெனத் தீர்ப்
பளிக்கப்பட்டது

## விவசாய ஆசிரியர் வேண்டுமாம்

முசலி, சனி

வன்னேரிக்குளம் அரசி
னர் தமிழ்க்கலவன் பாட
சாலையில் ஒரு விஞ்ஞான
ஆசிரியரையும் ஒரு விவ
சாய ஆசிரியரையும் நிய
மிக்க வேண்டுமென்று வன்
னேரிக்குளம் பெற்றேர் ஆசி
ரியர் சங்கம் வவுனிக்குளம்
இணைப்புக் குழுக் கூட்டத்
தில் கேட்டுக் கொண்டுள்
ளது.

மன்னர் மாவட்ட அர
சாங்க அதிபர் எஸ். கதிர்
காமநாதன் தலைமையில்
இக்கூட்டம் நடைபெற்றது.

## தேசியமொழி

தட்சிண பாரத் ஹிந்தி
பிரசாரசபை சார்பில்
அதன் தலைவர் திரு. ஏ. வி.
கௌடி திரு. ஏ. ஸி
காம...சிராவ் சபாவின்
வி... அதிகாரி திரு. எஸ்.
சந்திரமவுளி ஆகியோர்
கபார்கானை சந்தித்து நாட்
டின் மொழிச் சிக்கலைப்பற்றி
குறிப்பிட்டபோது எங்கள்
பாகிஸ்தானில் ஆங்கிலம்
பொது மொழியாக
தொடர்ந்து இருக்க ஒப்புக்
கொண்டிருக்கிறேம். உங்
கள் நாட்டைப் பற்றி என்
கருத்தைக் கூற நான்
விரும்பவில்லை என்று கூறி
னர்.

ஆயினும்காந்திஜி, ஹிந்து
ஸ்தானியை எல்லோரும்
கற்க வேண்டும்.
தேசிய மொழியாக
வரவேண்டுமென்று கூறி
னரே தவிர, ஒரு குறிப்
பிட்ட பகுதியில் பேசப்படும்

## பி. பி. ஸி. சேவை

லண்டன், ஜன. 3

பிரிட்டிஷ் ஒலிபரப்பு கூட்
டுத்தாபனத்தின் (பி. பி.
ஸி) வெளிநாட்டு சேவை
கள் தமிழ், சிங்களம்உ...
39 மொழிகளில் நடத்தப்
படுகின்றன. சென்ற ஆண்
டுக்கான பி. பி. ஸி. யின்
வருடாந்த அறிக்கையில்
இத்தகவல் தெரிவிக்கப்பட்
டிருக்கிறது.

'தேசத் தலைவர்கள்,
சிரேஷ்ட அரசாங்க அதிகாரி
கள் பத்திரிகையாளர்கள்
உட்பட உலகின் பல
பாகங்களிலுமுள்ள பிரமுகர்
கள் பி. பி. ஸி. சேவையை
ஆங்கிலத்தில் அல்லது
சுதேசியமொழிகளில் கேட்டு
வருகின்றனர் என இந்த
அறிக்கை கூறுகிறது.

## கி. ச. தலைவர் கோரிக்கை

உடுவில், சனி

உடுவில் கிராமசபைப் பகு
தியில் மோசமாக வெள்ளத்
தால் பாதிக்கப்பட்ட 4-ம்
வட்டார சங்குவேலிப் பகுதி
மக்களுக்கு நிவாரணம் வழ
ங்குவதற்கான நடவடிக்கை
களை மேற்கொள்ளும் படி
கி. ச. தலைவர் திரு. முத்து
லிங்கம் இப்பகுதி எம். பி.
மூலம் கழகசேவைப் பகுதி
யினரைக் கேட்டுக்கொண்
டுள்ளார்.

மயிலிட்டி

## கண்ணகி படிப்பகம்

காங்கேசன்துறை, சனி

மயிலிட்டி கண்ணகி படிப்
பக புதுவருட நிர்வாகிகள்
தெரிவின்போது பின்வ
வோர் தெரிவுசெய்யப்பட்
டனர்.

தலைவர் இ. யோகானந்
தம், உபதலைவர்: வி. பழனி
நாதன், செயலாளர்; என்.
கருணநிதி. துணைச்செயலா
ளர்: ஏ. பத்மநாதன்,
பொருளாளர். வி. பரம
நாதன். விளையாட்டுத்துறை
காரியதரிசி: எம். சோமேஸ்
வரானந்தம்.

பின்வருவோர் மன்றக்
காப்பாளர்களாக தெரிவு
செய்யப்பட்டனர். வீ. இரத்
தினராசா (5-ம் வட்டார
அங்கத்தவர்), என். வேல்
நாயகம், கே. வி. துரை
சாமி, கா. துரைஐயா.

பதில் இரு தலைவர்களுக்
கும் உடன்பாடு இருக்கின்
றது ஆனல் இருவருமே
தங்கள் பக்கம்தான் பெரும்
பான்மை ஆதரவு இருக்
கிறது என்று வற்புறுத்து
கிறர்கள்.

இந்திரா சார்பு காங்கி
ரஸ் கட்சியின் இடைக்கால
தலைவராக இருந்த திரு சி.
சுப்பிரமணியம் ஏற்கனவே
காங்கிரஸ் சின்னத்தையும்
கட்சிக்கு ஒதுக்கும்படிகோரி
தேர்தல் கமிஷனுக்குகடிதம்
எழுதியிருக்கிறர்.

தாங்கள் நடத்திய அகில
இந்திய காங்கிரஸ் கமிட்டிக்
கூட்டத்திலும் பம்பாயில்
நடைபெற்ற காங்கிரஸ்
மகாநாட்டிலும் பெரும்
பான்மையான காங்கிரஸ்
பிரதிநிதிகள் கலந்துகொண்
டனர் என்று திரு ஜெக
ஜீவன்ராம் அறிவித்த சில
நிமிடங்களுக்கெல்லாம் இந்
தக் கூற்றை திரு நிஜலிங்
கப்பா மறுத்து விட்டார்.
புதிய காங்கிரஸ் மாநாட்
டில் கலந்து கொண்டவர்
களில் பலரும் ஒன்று வெளி
யேற்றப்பட்டவர்கள் அல்
லது தாங்களாகவே வெளி
யேறியவர்கள் என்று திரு

## வரவு-செலவுத்திட்டம் நிறைவேறியது

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டிக் கிராமசபை
யின் 1970-ம் ஆண்டுக்கான
வரவு செலவுத்திட்டம்சபை
யில் ஏகமனதாக நிறைவேறி
யது. கி ச தலைவர் திரு. ஆர்.
ஆர். தர்மரத்தினம்அறிக்கை
யைச்சமர்ப்பித்துப்பேசினர்

1970-ம் ஆண்டுக்கான
உத்தேச வருமானமாக
1,72,744 ரூபா 41 சதமும்
செலவாக 1,69,411 ரூபா
93 சதமும் கணக்கிடப்பட்
டுள்ளது. கிராம சபையின்
மேலதிக வருமானமாக
16,598 ரூபா 91 சதம் என
வும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார விநியோகத்திற்
கென 25,000 ரூபாவும், வீதி
கள் அமைப்பதற்கு 30,000
ரூபாவும், பொதுமக்களுக்கு
இலவசமாகச் சிகிச்சையளிப்
பதற்கு 10,000 ரூபாவும்
ஒதுக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுவரி மூலம்
1,18,685 ரூபா பொதுமக்க
ளிடமிருந்து அறவிடலாம்
எனவும் தீர்மானிக்கப்பட்
டுள்ளது.

# 'நீங்கள் ஒரு முடிவுக்கு வாருங்கள் என பிரதமர் கைவிரித்துவிட்டார்'

## பல்கலைக்கழக விஷயம் பற்றி கோப்பாய் எம். பி. வெளியிட்ட தகவல்

மட்டுவில், சனி

'சாதி, சமய அடிப்படை
க்குஅப்பாற்பட்ட ஒருதமிழ்
பல்கலைக்கழகத்தை, இய
ற்கை அழகும், பலவசதிக
ளும், வடக்கு கிழக்கு மாகா
ணங்களுக்குமத்தியில் அமை
ந்திருப்பதுமான திருகோண
மலையில் அமைப்பதே நல்
லது என்ற கருத்தை இல
ங்கை தமிழரசுக்கட்சி பிரத
மர் டட்லிசேனநாயகாவிடம்
தெரிவித்தபோது, அவர் சில
ருடன் ஆலோசனை நடத்தி
விட்டு, தமிழரசுக்கட்சியின்
கருத்தை ஏற்றுக்கொண்
டார். இக்கருத்தை திரு.
மலலசேகராவோ, திரு ஐ.
எம். ஆர் ஏ. இரியகொல்
லையோ எதிர்ப்புத் தெரிவிக்க
முடியாதநிலையும் இருந்தது
ஆனல் யாழ்ப்பாணத்தில்
இந்துப்பல்கலைக்கழகம்தான்
வேண்டுமென்ற மகஜரை,
அகிலஇலங்கைத் தமிழ்காங்
கிரஸ் சமர்ப்பித்ததைத்
தொடர்ந்து, தமிழ்ப்பல்க
லைக்கழகமா, இந்துப்பல்க
லைக்கழகமா என்பதை நீங்
களே தீர்மானித்து ஒரு முடி
வுக்கு வாருங்கள் என்றுபிர
தமர் கைவிரித்துவிட்டார்.'

இவ்வாறு இலங்கைத் தமி
ழரசுக்கட்சியின்சாவகச்சேரி
வாலிபமுன்னணி கிளைகளின்
கருத்தரங்கின்போது, தமிழ்
பல்கலைக்கழகம் என்ற
பெயர் ஏன், அது திருமலை
யில் ஏன் அமைக்கவேண்டும்
என்ற கேள்விக்குப் பதில
ளிக்கையில், கோப்பாய்
ஆட்சிமன்றஉறுப்பினர் திரு
கதிரவேலுப்பிள்ளை கூறி
னர்.

சாவகச்சேரி ஆட்சிமன்ற
உறுப்பினர் திரு.வ. ந. நவ
ரத்தினத்தின் இல்லத்தில்
நடைபெற்ற இக்கருத்தரங்
கிற்கு சாவகச்சேரி எம். பி.
திரு. வ. ந. நவரத்தினம்
தலைமை தாங்கினர்.

இக்கருத்தரங்கு வைப
வத்தில் ஆயிரக்கணக்கான
வாலிப முன்னணிப் பிரதி
நிதிகளும் வட்டுக்கோட்டை
எம். பி. திரு. அ. அமிர்த
லிங்கம், உடுவில் எம். பி.
திரு வி. தர்மலிங்கம், திரு
எஸ். ஜே. வி. செல்வநாய
கம், அட்வக்கேட் திரு. எம்.
ஆலாலசுந்தரம், திரு. எம்.
வேலும்மயிலும், திருமதி
மங்கையர்க்கரசிஅமிர்தலிங்
கம், தென்மராட்சி முன்ன
ணித் தலைவி திருமதி இராஜ
பூபதி அருணசலம் உட்பட
நூற்றிற்கும் அதிகமான
மாதர் முன்னணி அங்கத்த
வர்களும் கலந்து கொண்ட
னர்.

காலை 7 மணி முதல் மாலை
8 மணிவரை நடைபெற்ற
இந்தக் கருத்தரங்கில் பல
முக்கிய விஷயங்கள்பற்றிய
கேள்விகள் கேட்கப்பட்டு,
அதற்கான பதிலும் கொடுக்
கப்பட்டன. திரு. கதிர
வேலுப்பிள்ளை எம். பி.
தொடர்ந்து கூறியதாவது:

தமிழ்ப் பல்கலைக்கழகம்
என்ருல் இதில் சாதி, மத
பேதம் என்பதற்கு இடமே
கிடையாது. இங்கு தமிழ்
மக்கள் எல்லோருக்கும் இட
முண்டு. இது திருமலையில்
அமைக்குமாறு கேட்டதற்
குக் காரணம்: திருமலை,
வடக்கு கிழக்கு மாகாணங்
களுக்கு மத்தியில் இருப்பது
தான்.

தமிழரசுக்கட்சி, திரு
கோணமலையில் விஞ்ஞான
பல்கலைக்கழகமும், யாழ்ப்
பாணத்தில் பொறியியல்பல்
கலைக்கழகமும், மட்டக்
களப்பில் கலைப்பல்கலைக்கழ
மும் அமைக்க வேண்டும்
என்ற தீர்மானமும் சமர்ப்
பித்தது. ஆனல் அதில்
உள்ள பல சிரமத்தைச்
சுட்டிக்காட்டிய 'பிரதமர்
இயலாதென கைவிரித்து
விட்டார்.

'சிங்கப்பூரில் மாணவர்
கள் பல்கலைக்கழகங்களுக்
குப் போய்த்தான் பயில
வேண்டும் என்ற அவசிய
மில்லை என்றும் அவர்கள்
வீட்டில் இருந்து கொண்டே
டெலிவிஷன் மூலம் பயில்
கிருர்கள் என்றும் அந்த
நிலை ஏன் இலங்கையில்
விரைவில் உருவாகக்
கூடாது? என்றும் திரு: கதிர
வேலுப்பிள்ளை கூறினர்.
திரு. அமிர்தலிங்கமும்
பேசினர்.

## பெண் விஞ்ஞானியின் புதிய கண்டுபிடிப்பு

லண்டன், ஜன. 3

பிரபல்யம் பெற்ற பிரிட்
டிஷ் பெண் விஞ்ஞானியான
பேராசிரியை டொரதி
கொக்ஸ்கின் அண்மையில்
ஒரு புதிய கண்டுபிடிப்பை
நிகழ்த்தி உலகப்புகழை
ஈட்டியுள்ளார். 1964-ம்
ஆண்டு ரசாயனதுறைக்கான
நோபல் பரிசைப் பெற்ற
இவர் கணையச் சுரப்பி
நீரின் (இன்சுலின்) மூலத்தன்
மையைக் கண்டுபிடித்திருக்
கிருர்.

ஒக்ஸ்போட் சர்வகலா
சாலை ஆய்வுகூடங்களில் 30
ஆண்டுகள்வரை அயராது
நடாத்திய ஆராய்ச்சியின்
பின்னரே இந்தஅதிசயகண்டு
பிடிப்பை அவர் நிகழ்த்தி
யிருக்கிருர். இந்தக்கண்டுபிடி
ப்பு கணையச் சுரப்பிநீரின்
(இன்சுலினின்) பிரயோகத்
தில் புரட்சிகரமான திருப்
பத்தை ஏற்படுத்துமென
விஞ்ஞானிகள்கூறுகிருர்கள்

மனித உடற்கூற்றில் கணை
யச் சுரப்பிசுரக்கும்ஒருவகை
நீர்தான் இன்சுலின், அதா
வது கணையச் சுரப்பிநீர். இந்
தச் சுரப்பிநீரின் அணுத்
திரண்மங்கள்தான் உடலி
லுள்ள உயிரணுக்கள் உட்
கொள்ளும்சீனிச்சத்தை நிர்
ணயிக்கின்றன- கணையச்
சுரப்பி நீர் போதாமையால்
நீரழிவுநோய் ஏற்படுகிறது.
எனவேதான் நீரதிவுநோயா
ளிக்கு 'இன்சுலின்' ஊசிமூலம்
பாய்ச்சப்படுகிறது. போரா
சிரியை டொரத், கணையச்
சுரப்பிநீரின் அணுத்திரண்
மங்களின் உள்ளமைப்
பையே கண்டுபிடித்திருக்கி
ருர். இக்கண்டுபிடிப்பு நீர
ழிவு நோயைத் தீர்ப்பதற்
கான புதிய வழிகளைத் திற
ந்துவிடலாமென நம்பப்படு
கிறது.

## பருத்தித்துறை இ.போ.ச ஊழியர் வேலை நிறுத்தம்?

உடுப்பிட்டி, சனி

பருத்தித்துறை இ.போ.ச
டிப்போ தொழிலாளர்கள்
அடுத்த வாரம் வேலை நிறுத்
தத்தில் குதிக்கப்போவதாக
எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.
இங்குகடமையாற்றியபோர்
மனை திரு பீ.கே.பஞ்சலிங்
கம் என்பவர் வேலை நீக்கம்
செய்யப்பட்டதை ஆட்சே
பித்தேஇவ்விதமுயற்சிநடை
பெறுகிறதாம்.

இவரது வேலைநீக்க உத்த
ரவை வாபஸ் பெறும்படி
பருத்தித்துறை இ.போ.ச
டிப்போ தொழிலாளர் யூனி
யன் பிரதிநிதிகளும், உடுப்
பிட்டிக்கிராமசபைத்தலைவர்
(சமசமாஜ)பஸ் தொழிலா
ளர் சங்கவடபகுதித்தலைவர்
திரு. ஆர். ஆர். தருமரத்தி
னம் ஆகியோரும் இ.போ.ச
பிராந்திய முகாமையாளர்
திரு. வேலுப்பிள்ளையைப்
பேட்டி கண்டு வற்புறுத்தி
யுள்ளனர் எனத்தெரிகிறது.
ஒருகிழமைக்குள் இது பற்றி
நடவடிக்கை எடுக்கப்படாத
பட்சத்தில் வேலைநிறுத்தம்
மேற்கொள்ளப்படுமென
இ.போ.ச ஊழியர் தெரிவித்
தனர்.

## காரியாதிகாரி நடவடிக்கை

முசலி, சனி

சமீபத்தில் பெய்த பெரு
மழையின் காரணமாக ஏற்
பட்ட வெள்ள அழிவை
நிவர்த்திசெய்ய மாந்தைக்
காரியாதிகாரி திரு. முத்
தையா சுப்பிரமணியம் வவ
னிக்குளம், விடத்தல்தீவு,
பாலம்பிட்டி, இரணை இலுப்
பைக்குளம், ஆகிய பிரதான
இடங்களிலுள்ள பாரிய
குளங்களைப் பார்வையிட்
டுள்ளார்.

## 8-ம் வகுப்பு பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த நவம்பர் மாதம்
18-ம் திகதி முதல் 22 வரை
நடைபெற்ற வடமாகாண
ஆசிரியர் சங்கத்தினரால்
நடாத்தப்பட்ட 8-ம் வகுப்பு
பரீட்சை முடிவுகள் வெளி
யாகிவிட்டன.

முதற்பிரிவில் 154 பேரும்,
இரண்டாம் பிரிவில் 741
பேரும், மூன்ரும் பிரிவில்
583 பேரும் சித்தியடைந்
துள்ளனர் என பரீட்சைச்
செயலாளர் அறிவித்தார்.
யாழ்ப்பாணம், மன்னர், முல்
லைத்தீவு, திருகோணமலை,
ஆகிய இடங்களிலுள்ள 65
பாடசாலைகளிலிருந்து 3226
பரீட்சார்த்திகள் இப்பரீட்
சைக்கு தோற்றினர். பரீட்
சையில் 45.8 என்ற வீதப்
படி மாணவர் சித்தியடைந்
துள்ளதாக புள்ளிவிபரம்
தெரிவிக்கிறது.

இவ்வாண்டுக்கான பரீ
ட்சை நவம்பர் மாதம் 16-ம்
திகதி நடைபெறும் என்றும்,
இதற்கான விண்ணப்பங்கள்
16-9-70 க்கு முன்னர் அனு
ப்பி வைக்கப்பட வேண்டு
மென்றும் அறிவிக்கப்படுகி
றது.


விற்பனையாகின்றது!

1970

"ஈழநாடு"
தினக் குறிப்பு
விலை: ரூ. 1-35 சதம்

"ஈழநாடு"
Pocket Diary
விலை: -75 சதம்

ஏராளமான தகவல்கள்!

எமது பத்திரிகை
விற்பனையாளர்களிடம்
பெற்றுக்கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சமயத்தின் பார்வையில் எல்லோரும் சமமே. கல்வி, அறிவு செல்வம் உடையவர்கள் இல்லாதவர்களை விட மேலானவர்கள் என்று உரிமை கொண்டாட முடியாது. —மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 589,

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 20-ந் திகதி (4-1-70)


## இரு 'சதி' வழக்குகள்

இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்க்க 'சதி' செய்ததாக குற்றம்சாட்டி 28 பேர் மீது நடைபெற்ற வழக்கில் எல்லா எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவ் வழக்கு மட்டுமல்ல இதற்கு முன் நடைபெற்ற ஒரு 'சதி' வழக்கிலும்எதிரிகள்யாவரும் விடுதலை செய்யப்பட்டனரென்பது குறிப்பிடத்தக்கது. வேறு பல நாடுகளிலே அரசாங்கத்துக்கு எதிராக சதி செய்ததாகக் குற்றம்சாட்டி நடக்கும் வழக்குகளிலே எதிரிகளில் பெரும்பாலோரும் தப்பமுடியாது. மரண தண்டனை அல்லது பல்லாண்டு கடுங்காவல் தண்டனை பெறுவர். இலங்கையில் நடைபெற்ற இரு பெரிய சதி வழக்குகளிலும் எல்லா எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ள திலிருந்து, இங்கு நீதிவழுவாநெறி முறை நடைபெறுகின்றதென்பதைக் காட்டுவதாக உள்ளது ஆகவே நமது நீதிமுறையின் சுதந்திரம் போற்றத்தக்கதாகும். இது உறுதியுடன் பாதுகாக்கப்பட்டுவரவேண்டும்.

இரு சதி வழக்குகளும் முடிவில் 'புஸ்வாண'மாகி எல்லா எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளதிலிருந்து சில முக்கிய கேள்விகள் எழுகின்றன. இவ்விரு வழக்கு எதிரிகளில் பலரும் ராணுவத்தில் அதிகாரிகளாவர். அவர்கள்மீது போதிய அத்தாட்சிகா இல்லாமல்ஏன் முந்திய அரசாங்கமும், இந்த அரசாங்கமும் வழக்குகள் தொடர்ந்தன? பொதுத் தேர்தல் மூலம் மாற்று அரசியல்கட்சி அதிகாரத்துக்கு வந்ததும், இராணுவத்திலுள்ள சில அதிகாரிகள் மீது நம்பிக்கையில்லாமற்போகின்றதா? புதிய கட்சி ஆட்சிக்குவந்தால், மற்றொரு 'சதி' வழக்கு உருவாகுமா? பல்லாண்டுகள் விசாரணைக் கைதிகளாக ஒரு குற்றமும்செய்யாதவர்களைப் பிடித்து வைத்தது [illegible] ரைப் பற்றி எழுகின்ற புகார்களைப் பார்க்கையில் இப்பகுதி பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் நல்லுறவு இல்லையென்பது தெளிவு. தமிழ்ப்பகுதிகளில் இராணுவ முகாம்களை முந்திய அரசாங்கம் வைத்ததின் நோக்கம் தமிழர்களை பயமுறுத்தி அடக்கி ஆளவே என்றும் பொதுவாக ஒரு கருத்து நிலவி வருகின்றது, பிடிபட்ட சட்ட விரோத குடியேற்றக்காரர்களில் மிகச் சிலரே இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டுள்ளனரென்பதைப் பார்க்கையில், இவ்வித வேலைகளுக்கு இராணுவத்தினரைத் தொடர்ந்து பயன்படுத்துவது எவ்விதத்திலும் சரியா என்பதைப் பற்றி அரசாங்கம் புனராலோசனைசெய்ய வேண்டிய சமயம் வந்துவிட்டது.

அண்டையிலுள்ள இந்தியா முதலிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கைக்கு நல்லவேளையாக வெளி ஆபத்துகள் இல்லை. அப்படியிருப்பினும், நமது சிறிய இராணுவத்தால் ஒரு சில மணிநேரமும் பெரிய வல்லரசுகளின் தாக்குதல்களைச் சமாளிக்கமுடியுமா என்பது சந்தேகம். இந் நிலையில் இங்கு முப்படைகளையும் நீடித்துவைத்திருப்பதால் என்ன பயன்? பலநாடுகளில் திடீர் திடீரென இராணுவப் புரட்சி ஏற்பட்டு வருவதைப் பார்க்கையில் இங்கும் இரு 'சதி' வழக்குகள் அடுத்தடுத்து தொடுக்கப்பட்டதை கவனிக்கையில் இங்கு இராணுவத்தைத் தொடர்ந்து பலப்படுத்துவது, அரசாங்கத்துக்கோ, நாட்டுக்கோ அவசியமா? நன்மையா? என்பதைப்பற்றி யோசித்தால் ஒரே ஒரு முடிவுக்குத்தான் யாரும் வரக்கூடியதாக இருக்கும்.

இது நாட்டுக்குப் பொதுவான தேசியப் பிரச்னை. எதிர்க்கட்சித் தலைவர்களை [illegible]

# அரசியலை சீர்திருத்துவதற்கு ஆசிரியர் ஒன்றுபடவேண்டும்

## வினேபாஜி கூறும் யோசனை

**'அரசியலை சீர்திருத்தவேண்டுமானல் ஆசிரியர்கள்அரசியலிலிருந்து விலகியிருக்கவேண்டும். அரசியல் சீர்திருத்தம் ஏற்படுவதற்கு ஆசிரியர்கள் ஆராய்ந்து,ஒருமனதாகத் தங்கள் கருத்துக்களை வெளியிடவேண்டும். அரசியலைத் திருத்துவதற்கு ஆசிரியர் குழாத்திஞல்தான் முடியுமென்று விேனபாஜி அவர்கள் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்,**

அரசியல் சீர்திருந்த வேண்டுமெனில் ஆசிரியர்களின் கூட்டம் தயாராக வேண்டும். ஆசிரியர்களின் இந்த அமைப்பு ஒவ்வொரு பிரச்னை பற்றியும் தன் கருத்தை வெளியிடவேண்டும். பல்வேறு பிரச்னைகள் பற்றியும் ஆசிரியர்கள் குழாம் ஆராய்ந்து ஒருமனதாகதமது கருத்தை வெளியிடவேண்டும். அரசியலை சீர்திருத்த வேண்டுமெனில் ஆசிரியர்கள் அரசியலிலிருந்து விலகி இருக்கவேண்டும். இருந்தால்தான் அவர்களுடைய சொல் எடுபடும். அரசியலில் ஆசிரியர்களும்ஈடுபட்டுவிட்டால் அதைச் சீர்திருத்த முடியாது. அவர்களே அரசியல் சுழலில் சிக்கிவிடுவார்கள். ஓர் இயந்திரத்தை இயக்கவேண்டுமெனில் அதற்கு வெளியே ஒதுங்கியிருந்துதான் இயக்கவேண்டும். அதே போன்று அரசியலையும் இயக்கவேண்டும், இதெல்லாம் ஆசிரியர்கள் குழாத்திஞல்தான் இயலும்.

உங்களது ஆசிரியர்கள் சங்கம் இருக்கிறது. அது ஆசிரியர்கள் பிரச்னை பற்றி சிந்திக்கிறது. அது நல்லது தான். ஆனல் கல்வியில் முக்கியமான மாறுதல்கள் செய்யவேண்டுமென்றும் அது கோரவேண்டும். உங்கள் ஆலோசனையை அரசு ஏற்காவிட்டால் கல்லூரிகளைவிட்டு வெளியேறி ஒரு மாத காலத்திற்கு வயலில் போய் வேலைசெய்யுங்கள் என்று மாணவர்களுக்கு ஆலோசனை கூறலாம். முழு அளவுக்கு ஸ்டிரைக் நடக்க வேண்டும்.

எல்லாக் கல்லூரிகளும் மூடப்பட்டுவிட்டால், ஆசிரியர்களும், மாணவர்களும் கிராமங்களுக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். யாரும் கல்லூரிகளுக்குச் செல்லுவதில்லையே என்று அரசு சிந்திக்கவேண்டியிருக்கும், அதன்பின்னர் உங்கள் கோரிக்கையைப் பற்றிப் பேசத் தயாராகிவிடும்.

ஏதாவது வேலை செய்ய வேண்டுமெனில் அதற்கான ஆற்றல் நம்மிடம் இருக்க வேண்டும் சமீபத்தில்மாணவர்கள் ஸ்டிரைக் செய்தார்கள். சிலமாணவர்கள் என்னைச் சந்திக்க வந்தார்கள். நீங்கள் வருடம் பூராவும் கல்லூரிக்குச் செல்லாமல் இருக்க வேண்டியதுதானே ஏன் 8, 10 நாட்களுக்கு மட்டும் ஸ்டிராக் செய்கிறீர்கள் நான் கல்லூரியை விட்டு விலகினேன் நான் பி ஏ. பட்டம் பெறவில்லை. கல்லூரி படிப்பினுல் எப்பயனும் இல்லை என்று நான் அவர்களிடம் கூறினேன். நாங்கள் இவ்வாறு செய்தால் முட்டாள்களாகி விடுவோம். என்று மாணவர்கள் கூறினர்கள. இங்குள்ள ஜகந்நாததாஸ் பெரிய இலக்கியகர்த்தா. ஆனல் கல்லூரி எதிலும் அவர் படிக்கவில்லை. கல்லூரியில் படிக்காமலேயே திரு. ஜகந்நாததாஸ் ஒரு பெரிய இலக்கியகர்த்தா ஆகமுடியுமானல் கல்லூரிக்கு ஏன் செல்லுகிறீர்கள்? இன்றைய கல்வி சாரமற்றது. கல்வியில் கட்டாயம் மாற்றம் செய்யவேண்டும்.

இந்தியாவில்

# அரசியல் குழப்பங்கள் நன்மையில்முடியுமாம்

சென்னை, ஜன. 3

''பார்லிமெண்டரி முறை இந்திய நாட்டுக்கு நன்மை பயக்காது என்று காந்தியடிகள் கூறியதை இன்றைய அரசியல் சம்பவங்கள் மெய்யாக்கி உள்ளன. இன்றைய நிலை வேதனை தருவதாக இருப்பினும் நாம் அஞ்சத் தேவையில்லை. புதிய முறை வருவதற்கு இவைவழிவகுக்கலாம். இப்போதுள்ள கேடுகளை உணர்ந்து நீக்கி நல்ல ஆட்சிமுறை வகுக்க இது துணைசெய்யும். ஆகவே காந்திய சிந்தனையாளர்கள் இது பற்றி தீவிரமாகச் சிந்தனை [illegible] டினர் நம் நகரங்களைப் பார்க்கின்றனர். பின்னர் இங்கு நடைபெறும் கலவரங்களையும், கட்சிப் பூசல்களையும் காணும்போது இந்தியாவில் காந்திஜி எங்கிருக்கிறார் என்று கேட்கிறார்கள்.

''இந்தியாவே கிராமங்களில் தான் வாழ்கிறது. காந்தி[illegible]மும் இப்போது கிரா[illegible]களில் தான் வாழ்கிறது. அண்ணலின் அன்புப் புரட்சி வினேபா அடிகளின் கிராமத[illegible]ளது. [illegible] மீது [illegible]ப்பு நீங்கியுள்ளது. [illegible]

# இந்திரா அரசுக்குபதில் மாற்று அரசாங்கம்

## சுதந்திராக்கட்சியின் ஆசை

புதுடில்லி, ஜன. 2

இந்திராகாந்தி அரசுக்குப் பதிலாக மாற்று அரசை அமைப்பது சாத்தியமாகுமென்று சுதந்திரா கட்சி தலைமைப்பதவியை ஏற்ற பிறகு ஓர் அறிக்கையில் எம் ஆர், மாசனி கூறினர். எந்தக்கட்சியும் அதைத்தனியாகச் செய்யமுடியாது. ஆனல் ஜனநாயகக் கட்சிகள் அதை கூட்டாகச் செய்யமுடியும் என்றார்,

நாட்டின் நம்பிக்கையைப் பிரதமர் இழந்துவிட்டார். பார்லிமெண்டைக் கலைக்க அவர்கேட்கவேண்டும். அவ்வாறு அவர்செய்யாவி[illegible]ல் மக்கள் நம்பிக்கையை அ[illegible] பெற்றிருக்கவில்லையென்பது தெளிவாகிவிடும் என்று மாசனி கூறினர்.

தேர்தல் நடந்தால் இந்திரா காந்தி முடிவாகத் தோற்கடிக்கப்படுவார் [illegible]யும்.

பெரிய நகரங்களில் உள்ள இரு பிரிவினர் இந்திராவை ஆதரிக்கின்றனர். துரிதமாக பணம் சம்பாதிக்க விரும்புவது ஒருகோஷ்டி, மற்றது கீழ்மத்தியதரவகுப்புகளும் கொண்ட பஜார்சக்திகள்,பல நாடுகளில் அவை பாசிஸ்டுசக்திகளை ஆதரித்து வந்துள்ளன. கூறினர்

நாட்டின் 4 பிரதான தேவைகளை அவர் கீழ்க்கண்டவாறு வர்ணித்தார். தூய, திறமையான நிர்வாகம், சட்டம், ஒழுங்கு நிலைமையை ஏற்படுத்துதல். கடும்உழைப்பு, உற்பத்திப் பெருக்கம், சித்தாந்த நோக்கமின்றி நாட்டின் பிரச்னைகளைப் பிரத்தியட்சபூர்வமாக அணுகுவது. தற்போதுள்ள அரசு இவற்றை மேற்கொள்ள முடியாது என்றார்.

# ஜயாரன் எழுதுவது..

தொண்டைமண்டல ஆதீனகுரு மகாசந்நிதானமான சீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகளவர்கள், யாழ்ப்பாணத்திலே மேலும் தங்கி இருக்க 'விஸா' நீடிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

திருக்கேதீச்சரதிலே திருவாசக விழாவுக்குத் தலைமை வகிக்க வந்த சுவாமிகளவர்களின் 'விஸா' நேற்று 3ந் திகதியுடன் முடிந்தது. யாழ்ப்பாணத்திலே பல அன்பர்கள் அவரது சாஸ்திர ஞானத்தையும் அனுபவத்தையும் பண்பையும் கண்டு, அவர்கள் இங்கு மேலும் இருந்து ஞானப்பணிசெய்ய வேண்டுமென்று பெரிதும் விரும்பினர். குடியேற்றக் கட்டுப்பாட்டுக் காரியாலயத்துக்கு அவர்கள் மனுச் செய்யவே சுவாமிகளின் 'விஸா' காலத்தை அதிகாரிகள் நீடித்துவிட்டனர். இதற்காக இங்குள்ள சைவசமூகத்தின் நன்றி அந்த அதிகாரிகளுக்கு உரித்தாகும்.

சுவாமிகளவர்கள்வண்ணை சிவதொண்டன் நிலையத்துக்கு எதிரேயுள்ள திரு. சோமசுந்தரரின் புனித வீட்டில் தங்கியிருக்கிறார்கள். சிவதொண்டன் நிலையத்தில் சென்ற சில நாட்களாக சைவசாஸ்திர வகுப்பு நடத்தி, பல சந்தேகங்களை விளக்கி வருகின்றார்கள். இதுவரை தமிழகத்திலிருந்து வந்த சைவப் பெரியார்களைவிட சுவாமிகள் அவர்களின் விளக்கம் மிகத் தெளிவாகவும் மனதில் பதியும்படியும் உள்ளதென்றும் அதைக் கேட்ட ஓர் அன்பர் தெரிவிக்கின்றார்.

காரைநகர் சிவாஸ்ரமத்திலே நேற்று முன்தினம் சுவாமிகள் திருவாசகம்பற்றிப் பேசியது அருமையாக இருந்ததாயும் நூற்றுக்கணக்கானவர் கேட்டுப் பயன்பெற்றதாகவும் தெரிகிறது.

0 0 0

மாவை முருகப்பெருமான் சந்நிதியில் சென்ற 5 மாதகாலமாக பெரிய புராண விரிவுரை சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் சைவப்பிரசாரகர் வை. நல்லையா அவர்கள் விரிவுரைகளை பக்திபரவசமாகச் செய்து வருவதாகவும் ஓர் அன்பர் வந்துதெரிவித்து [illegible] செல்விக்கு பரிசுப்பணம் 3 ரூபாய் வழங்கப்பெற்றதாம். கூட்டத்திலிருந்தவர்கள் மகிழ்ந்து அச்செல்விக்கு பணம் கொடுத்து ஆசிகூறியதாயும் அதில் ஒரு பகுதியை ஒரு கோயில் திருப்பணிக்கு அக்குழந்தை அளித்ததாகவும் தெரிகிறது பலே பலே!

ஈழத்திலே சைவமும் திருமுறைப் பயிரும் செழித்தோங்குவதைக் கண்டு தமிழகத்திலிருந்து வந்துள்ள சீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் போற்றி மகிழ்ந்து, தமிழகத்துக்கு ஈழமே வழிகாட்டுகின்றதென்று தெரிவிக்கின்றார்கள்.

0 0 0

தேவார திருமுறை நூலுக்குமேல் யாரோ ஓர் அன்பர் ஒரு புத்தகத்தை வைத்ததும், அவ்விதம் செய்வது அபசாரமென்றும் திருமுறை நூல்களுக்கு மேல் வேறு எந்த நூலையும் வைக்கப்படாதென்றும் சுவாமிகள் கூறி அந்நூலை எடுத்துவிட்டார்கள். பெரியவர்களிடம் நாம் தெரிந்துகொள்ள வேண்டியவை எவ்வளவோ உள்ளன.

0 0 0

மோதிரம் யாருடையது? என்று 'ஈழநாட்'டில் ஒரு செய்தி வெளியானதல்லவா? அன்றே ஒரு பெண்மணி சரியான அடையாளங்களைக் கூறி அதை நன்றியுடன் பெற்றுச் சென்றார்.

அது சுமார் ஒரு தங்கப் பவுண் எடையுள்ளது. மதிப்புமிக்க இம்மோதிரத்தைக் கண்டு எடுத்தவர், நேரே நமது காரியாலயத்துக்கு வந்து அதை ஒப்படைத்ததுடன். தமது பெயரை விளம்பரப்படுத்த வேண்டாமென்று அடக்கமாகக் கேட்டுக் கொண்டார். இக்காலத்திலும் இவ்வித நல்லவர்கள் இருப்பதால்தான் உலகம் இந்த மட்டில் நடந்து வருகின்றது.

'ஈழநாடு' பத்திரிகை வெறும் செய்திகளை விற்றுப் பிழைக்கும் வர்த்தக ஸ்தாபனமல்ல. இங்கு சமூகத்துக்குத் தன்னாலான எல்லாத் தொண்டுகளையும் செய்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற நல்ல தொண்டனகை வளர வேண்டுமென்பதே 'ஈழநாட்'டின் நோக்கமாகும். இழந்த மோதிரத்தை மீண்டும் 'ஈழநாடு'மூலம் பெற்ற பெண்மணியின் நன் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி ஆட்சிக்குவந்தால், மற்றொரு 'சதி' வழக்கு உருவாகுமா? பல்லாண்டுகள் விசாரணைக் கைதிகளாக ஒரு குற்றமும்செய்யாதவர்களைப் பிடித்து வைத்தது சரியா? இரு 'சதி' வழக்குகளுக்குப் பொதுப்பணம் எவ்வளவு செலவாயிற்று? இவ்வித சதிவழக்குகள் இராணுவத்தினர் மீது அடிக்கடி நடைபெறுவது, நாட்டு இராணுவத்தின் நற்பெயருக்கு இழுக்காகாதா? இக்கேள்விகளைப் பற்றி சற்றே சிந்தித்தால் இன்றைய நிலைமையைப்பற்றி யாரும் நிம்மதியடைவதற்கில்லை.

மேலும் மன்னார் உள்ளிட்டு வடபகுதியில் வைக்கப்பட்டுள்ள இராணுவத்தின[illegible] ஒரே ஒரு முடிவுக்குத்தான் யாரும் வரக்கூடியதாக இருக்கும்.

இது நாட்டுக்குப் பொதுவான தேசியப் பிரச்னை. எதிர்க்கட்சித் தலைவர்களையும், அரசாங்கம் அழைத்துப் பேசி, படிப்படியாக நமது இராணுவத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாயின். அது எல்லாவிதங்களிலும்நன்மையாவதுடன், மற்ற நாடுகளுக்கும் நல்ல வழிகாட்டுவதாக இருக்கும். இராணுவப் படையை நம்பி ஆட்சி செலுத்துவதிலுள்ள ஆபத்தை மகாத்மாகாந்தி அவர்களும் எச்சரித்தது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## தமிழ் தலைவர்கள் முயற்சி செய்வார்களா?

தமிழ்மொழியின் உரிமைக்காக வாதாடி வரும் நமது தலைவர்கள், சில விஷயங்களை இலகுவாக ஆட்சியாளரைக்கொண்டு. செய்யக்கூடிய நிலையில் இருந்தும் அவற்றில் கவனம் செலுத்துகிறார்களேயில்லை. அன்னியர்கள் இலங்கையை ஆட்சி செய்த நேரத்தில் அவர்கள் தங்கள் வசதிக்கேற்ப உச்சரிப்புக்காக, நல்ல அழகான ஊர், நகர் ஆகியவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் வேறு கருத்துப்படப் பெயர்கள் சூட்டியுள்ளார்கள்.

உதாரணமாக யாழ்ப்பாணம்-யப்பினுவாகவும், திருகோணமலை - ரிங்கமலியாகவும், மட்டக்களப்பு - பற்றிக்கலோவாகவும், ஊர்காவற்றுறை - கயிற்ஸாகவும், பருத்தித்துறை - பொயின் பிற்றேவாகவும், ஆனையிறவு-எலிபன்பாசாகவும், நெடுந்தீவு - டெலப்ராகவும் ஆங்கில சொற்களால் அழைத்துள்ளார்கள். இன்னும் பல ஊர், நகர் பெயர்கள் இவ்வாறே பெயரிடப்பட்டுள்ளன. அன்னியஆட்சி மறைந்து சுதந்திர இலங்கையில் வாழும் நாம் ஏன் மேலும் அச்சொற்களால் எமது அழகானஊர், நகர்களை அழைக்க வேண்டும்.

தலைநகரில் அன்னியர்களின்ஞாபகமாக அவர்களால்பெயர் சூட்டப்பட்ட வீதிகளின் பெயர்களை அந்த மாநகர சபையினர் மாற்றி தேசிய தலைவர்களின் பெயர்களைச் சூட்டியுள்ளார்கள். இப்படியான நல்ல மாற்றங்களை அவர்கள் செய்யும் நேரத்தில் தமிழர்களாகிய நாங்களும் ஊர், நகர் பெயர்களை ஏன் ஒரே தமிழ் சொல் உச்சரிப்பு மூலம் அழைக்கமுடியாது.

தமிழ் நாட்டை நோக்குவோமானால் அங்கே இப்பொழுது நல்ல மாற்றங்கள் நடைபெற்று வருவதைக் காணலாம். மட்ராஸ்ஸ்ரேற் என்று அழைக்கப்பட்டுவந்த மாநிலத்தை நல்ல அழகான தமிழ் சொல்லான 'தமிழ் நாடு' என்னும் சொல்லால் மாற்றிஅமைத்துள்ளார்கள். பெயர்மாற்றத்திற்கு, மறுக்கப்பட்டுவந்த டால்மியாபுரம் 'கல்லக்குடி' என்னும் பழம்பெயர் சூட்ட, மத்திய அரசினர் மாநில ஆட்சியாளரின் சிபார்சின் பேரில், செய்ததை அறிந்து மகிழ்சியடைகிறோம்.

நமது ஆட்சிமன்ற உறுப்பினர்களும், உள்ளூர் ஆட்சித் தலைவர்களும் மாவட்ட தலைநகர்களில் நடக்கும்மாவட்ட இணைப்புக்குழு கூட்டத்தில் இதனை நிறைவேற்றி. உள்ளூர் ஆட்சி அமைச்சருக்கு அனுப்பினால் நிச்சயம் அவர் தமிழ் தலைவர்களின் கருத்துக்கு மதிப்பளித்து ஆவன செய்வார். காலம் தாழ்த்தாது, தமிழர்களின் புதுவருடமான சித்திரை முதல் இதனை அமுல்செய்ய ஆட்சிமன்ற உறுப்பினர்களும் உள்ளூர் ஆட்சி தலைவர்களும் முயற்சிசெய்வார்களா?

ஐ. இராமசாமி
புன்னாலைக்கட்டுவன்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

கலாம். இப்போதுள்ள கேடுகளை உணர்ந்து நீக்கி நல்ல ஆட்சிமுறை வகுக்க இது துணைசெய்யும். ஆகவே காந்திய சிந்தனையாளர்கள் இது பற்றி தீவிரமாகச் சிந்தனை செய்யவேண்டும்'' இவ்வாறு சர்வோதயத் தலைவரும், தமிழ்நாடு காந்தி நினைவு நிதிச்செயலாளருமான திரு. க. அருணசலம் கோவையில் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றியபோது ''இந்தியாவுக்கு வருகின்ற வெளிநாட் [illegible] கிராம[illegible]களில் தான் வாழ்கிறது. அண்ணலின் அன்புப் புரட்சி விநோபா அடிகளின் கிராமதானமாக மலர்ந்துள்ளது. சொத்துடைமையின் மீது [illegible]ப்பு நீங்கியுள்ளது. 1,20,[illegible] கிராமங்கள் தானமாகியுள்ளன. நகரங்களை விட கிராமங்களில் அன்பும், அமைதியும் காணப்படுகின்றன. ஆகவே கிராமங்களில்தான் காந்தியம் வாழ்கிறது.'' என்று குறிப்பிட்டார்.

## கமிஷன் முடிவெடுத்தாலும்...

'தமிழும், சிங்களமும் முக்கிய பாஷைகள். இரண்டும் அரசகருமமொழிகளாக சம அந்தஸ்துடன் இருக்கவேண்டும். சிங்களவர் தமிழையும் தமிழர் சிங்களத்தையும் கற்கவேண்டும்'. இத்தகைய கொள்கையே ஆதியில் ஐக்கியதேசியக்கட்சியின் சிறப்பான கொள்கையாக இருந்தது திரு. டி. எஸ், சேனநாயகா இதனை நன்சி வற்புறுத்தினார். சாவகச்சேரி மகளிர் கல்லூரியை திறந்துவைத்த அன்றும் இக்கொள்கையை இடித்துக்கூறினார். ஓர் ஆங்கில தினசரியின் அக்காலக் கேலிச் சித்திரக்காரர் 'தமிழ்ப்பெண்மணி ஒருத்தியையும் சிங்களப்பெண்மணிஒருத்தியையும் இரண்டு இடுக்குகளுக்குள்ளும் டி. எஸ். அள்ளிக்கொண்டு ஓடும்' பாவனையில் ஒரு சிறந்த சித்திரத்தைத் தீட்டினார்.

காலம் கடந்தது; இங்கும் புதியகட்சிகள் உதயமாயின. பிரதம மந்திரியாக வந்த சேர் ஜோன் கொத்தலாவலைக்கு நெடுந்தீவில் முடிசூட்டப்பட்டகாலம். அவரும் இருபாஷை சமத்துவத்தை துலாம்பரமாகப்பேசி ஒவ்வொருபாடசாலையிலும் இருமொழியும் பயிற்றப்பட வேண்டும். அதற்கேற்படும் செலவுஎவ்வளவு கூடினாலும் இன ஒற்றுமைக்காக நான் எச்செலவையும் பொருட்படுத்தமாட்டேன் என்றார். அச்சில் வந்தது.

கனம்பொருந்தியசிங்களக் கல்விமான்கள் 'ஈயல்' போன்று வெளிப்பட்டனர். நாலுமுறை கலக்குக்கலக்கினர். தாம் தப்ப-களனிமகாநாட்டைக் கூட்டினர். புரட்டித் தீர்த்தனர். நாக்குத் தடம் புரண்டது. திரு. நடேசன் அவர்கள் திரு. குமாரசாமியைத் தொடர்ந்து சகல தமிழ்ப் பிரதிநிதிகளுடனும் மறுநாள் எதிர்ப்பும் சென்றார் அவ்வமயம் பாராளுமன்றத்தில் திரு. நடேசன் ஆற்றிய உருக்கமான உரை ஆயிரம் பொன் பெறும் நடந்தது யாது? இங்கே தோன்றியபாணியில் தெற்கில் முளைத்த புதிய கட்சி பலபல ஸ்தானங்களைக் கைப்பற்றியது. களனிக்கும் தம்பதெனியாவுக்கும் ஒருவரே பிரதிநிதியானார். அது தேமீஸ் சகாப்தமாயிற்று. ஒற்றுமைதிடீரென்றுசிதைந்தது. வேற்றுமை விரிந்தது பின்பு-இன்னும் முறைப்படி இயங்காத தனிச்சிங்களச் சட்டம் - 24 மணிச் சுலோகம் தளர்ந்தது. பிறகு பழையபடி தேசியம் தற்போதைய தலைவரால் உருவாக்கப்பட்டது.

மாவட்டசபை என்பது நாலு அம்சத் திட்டத்தில் ஒன்றான மாகாண சுயாட்சியின் ஆயிரத்தில் ஒரு கூறு என்று சொல்லலாம். அதைச் சட்டமாக்க இப்போதைய பிரமுகர் முயன்றதும் கேளாமலே சிங்களப்பிரமுகர்களின் அபிப்பிராயம் வெளிப்பட்டது. மழைகாலத்து தும்பிகள் போல்; நடந்தது என்ன?

ஆகவே தமிழ் மக்கள் ஏகோபித்துவடக்கு-கிழக்கு-தெற்கு-மேற்கிலுள்ள யாவரும் திரண்டு ஒரு முறையீட்டில் கைச்சாத்திட்டாலும் விசாரணைச்சபைமுடிவுஎடுத்ததும் நடப்பது என்ன?

நாலு நல்ல சிங்களப்பிரமுகர்கள்-கடவுளே என்று குறையில்லை-மாஜி பிரதம நீதிபதிகளே உளர்-வெளிக்கிளம்ப விசாரணைச்சபை முடிவு – அரோகராவாகும்.

ஆகவே முதற்கண் சிங்களப் பிரமுகர்களின் முடிவை கோருவதே புத்திசாலித்தனம் என்பது புரியவில்லையா?

ப சு. பரமநாதன்
குமரபுரம்.
பரந்தன்.

மக்கள் நம்பிக்கையை அ[illegible] பெற்றிருக்கவில்லையென்பது தெளிவாகிவிடும் என்று மசானி கூறினார்.

தேர்தல் நடந்தால் இந்திரா காந்தி முடிவாகத் தோற்கடிக்கப்படுவார் [illegible] மசானி கூறினார். மக்கள் ஆதரவு ஏற்பட்டிருப்பதாகக் கூறுவது மிகைப்படுத்தப்பட்டதாகும் என்றார்.

பம்பாயில்நடந்த போட்டி காங்கிரஸ் மகாநாட்டை, 'மார்க்சிஸ்டு காங்கிரஸ்' என அவர் வர்ணித்தார்.

எல்லா தேச பக்தர்களும் ஜனநாயக வாதிகளும்ஒன்றுபடக்கூடிய முன்னணி ஏற்படுத்த மீண்டும் அவர்வேண்டுகோள் விடுத்தார். அத்தகைய விஷயத்தில் முன்னணியில் நிற்பதுதன்கட்சியின் பணியாகஇருக்கும் என்றார்.

மத்திய அரசாங்கத்தை நடத்த கட்சிகள் கூட்டணி உருவாகும். குறைந்தபட்ச திட்டத்தை இந்திராகாந்தியின் காங்கிரஸ்ஏற்றால் கூட்டாளியாகஅதைஏற்பீர்களா என்று கேட்டதற்கு மசானி கூறியதாவது:-

கம்யூனிஸ்டுகளுடன் கூட்டுறவை முறித்து, கம்யூனிஸ்ட்டு-எதிர்ப்பு போக்கை மேற்கொண்டால் அவருடன் நமது வேறுபாடுகளை தீர்க்கப் பேச்சுநடத்த முடி[illegible] பெருக்கம், சித்தாந்த நோக்கமின்றி நாட்டின் பிரச்னைகளைப் பிரத்தியட்ச பூர்வமாக அணுகுவது. தற்போதுள்ள அரசு இவற்றை மேற்கொள்ள முடியாது என்றார்.

சொத்துரிமை மீது தாக்குதல், விவசாயிகளிடமிருந்து நிலத்தைப் பிடுங்கும் நோக்கங்கொண்டது என மசானி கருதினார். நாகபுரி காங்கிரஸில் இதுபோன்ற முயற்சியைநேருசெய்தார். அதுமுறியடிக்கப்பட்டது. இப்பொழுது அது புதுப்பிக்கப்படுகிறது. அதை எதிர்த்து சுதந்திரா கட்சி முன்னின்று போராடும் என்றார்.

பம்பாய் காங்கிரஸ் திட்டத்தை முழு சர்வாதிகாரத்தின் சின்னம் என அவர் குறிப்பிட்டார். முற்போக்கு போலதொனிப்பதில்பழைய காங்கிரஸ் போன்றகட்சிகள் போட்டி போடாமல் நாட்டுக்கு நல்லதையே தங்கள்திட்டங்களாகக் கொள்ள வேண்டும் என்றார். பொது இன்ஷியூரன்ஸை அரசுடமையாக்கும் உதாரணத்தைஅவர் குறிப்பிட்டார். மற்றத் துறைகளில் தேச உடமை தோற்றதால் இக்கோரிக்கையை விடாப்பிடியாக வைத்திருப்பது அவசியமில்லை என்றார்.

தனியார் நிறுவனம் போட்டி போடும் வகையில்

## முன்னறிவித்தலற்ற விசேஷ புகையிரத சேவை

டிசம்பர் 19-ம் திகதி கொழும்பு கோட்டையிலிருந்து ஒரு விசேஷ புகையிரதம் மாலை 7 மணிக்குப்புறப்பட்டு அடுத்தநாள் காலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. இவ்விசேஷ புகையிரத சேவைபற்றிய அறிவித்தல் அன்றைய தினமே ஆங்கிலப் பத்திரிகையான 'டெயிலி நியூஸில்' வெளியிடப்பட்டிருந்தது. இப்புகையிரதம் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்ப எப்பொழுது புறப்படுமென அறிவிக்கப்படவுமில்லை. அது பற்றி ஒருவருக்குமே தெரியாது.

இதேபோன்று டிசம்பர் 22-ம் திகதியும் ஒரு விசேஷ புகையிரதம் கொழும்பு கோட்டையிலிருந்து பிற்பகல் 12-55 மணிக்கு புறப்பட்டது. இதுபற்றிய தகவலும் டிசம்பர் 21-ம் திகதி மாலை 'ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

இவ்விசேஷ புகையிரத சேவைகள் பற்றி மக்களுக்கு ஏன் விபரமாக நேரகாலத்துக்கு அறிவிக்கப்படவில்லை. ஆங்கில- தமிழ்- சிங்கள பத்திரிகைகள் யாவற்றிலும் இதுபற்றிய தகவலைவிரிவாக வெளியிட்டிருக்கலாம். யாழ், சென்ற இவ்விசேஷ புகையிரதங்கள்எப்பொழுது திரும்புகின்றன என்பது பற்றியும் ஏன் மக்களுக்கு அறிவிக்க முடியாமற் போய் விட்டது.

புகையிரத ஊழியர் வேலை நிறுத்தத்தினால் ஏற்பட்ட பிரயாணக் கஷ்டத்தைப் போக்க என ஒழுங்குசெய்யப்பட்ட இப்புகையிரதங்கள் போதிய முன்னறிவிப்பின்றி ஏன் சென்றன. இப்புகையிரதங்களில் சென்ற பிரயாணிகள் இப்புகையிரதங்களில் மக்கள் கூட்டம் குறைவாகவுள்ளதைக் கண்டனர். போதிய தகவல்கள் முன்னறிவித்தல் இன்றி இத்தகைய புகையிரத சேவைகள் நடைபெற்றால் அவை பற்றி மக்கள் எவ்வாறு அறிவார்கள்.

இந்த விசேஷ புகையிரதங்கள் திரு. றம்பாலாவின் விருப்பத்திற்காக அதாவது அவர் சந்தோஷப்படச் சென்றனவா? அல்லது விசேஷ புகையிரத சேவைகள் தேவையில்லை என்பதைக் குறிக்கச் சென்றனவா?

— பிரயாணி

நடைபெற்று வருவதாகவும் சைவப்பிரசாரகர் வை. நல்லையா அவர்கள் விரிவுரைகளை பக்திபரவசமாகச் செய்து வருவதாகவும் ஓர் அன்பர் வந்துதெரிவித்து ஒரு விசேஷத்தையும் கூறினார்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் சரித்திரம் இப்போது நடைபெறுகிறதாம். அப்பெருமானின் ஏதாவதொரு பதிகத்தை முழுதும் பிழையின்றி மனனமாக்கிப் பாடக்கூடியவருக்கு பரிசு வழங்குவதாக அறிவிக்கப்பட்டது சென்ற வாரம் நாயன்மார்கட்டைச் சேர்ந்த செல்வி பரமேசுவரி இரகுநாதன் (7 வயது) திருநீற்றுப்பதிகத்தை மனனம் செய்து பிழையின்றி சபையோர் முன் ஓதவே, அச் பெற்ற நல்ல தொண்டனைக் வளர வேண்டுமென்பதே 'ஈழநாட்'டின் நோக்கமாகும். இழந்த மோதிரத்தை மீண்டும் 'ஈழநாடு'மூலம் பெற்ற பெண்மணியின் நன்றியும், மகிழ்ச்சியும், நம்பிக்கையும் போன்ற உணர்ச்சிகளே நமது அசைக்க முடியாத அஸ்திவாரமாகும். இதுபோன்று மேலும் பலவித தொண்டுகளைச் செய்ய 'ஈழநாடு' ஆவலுடன் காத்திருக்கின்றது.

0 0 0

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம், வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக, ஆழ்க தீயது எல்லாம் அரனாமமே, சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்

## ச. ச. நிலைய மாநாட்டில் செனட்டர்களும் எம். பி. க்களும்
### இன்று யாழ். செயலகத்தில் நடக்கிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் மகாநாடு ஒன்று யாழ்ப்பாணம் செயலகத்தில் இன்றுமாலை நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டில் யாழ். மாவட்ட சகல எம் பிக்களும், செனட்டர்களும், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஜோசெப் தலைமையில் நடைபெறும்.

அகில இந்திய ரேடியோவை கார்ப்பரேஷனுக்கஆஸ்திரேலிய பாணி யோசனையை அவர் தெவித்தார். அதில் அரசியல் கட்சிகளின் தலையீடு கூடாது என்றார்.

சுதந்திராவைமாறுதல்கள் விரும்பும் கட்சி என அவர் குறிப்பிட்டார். கண்ட்ரோல்கள் சிவப்பு நாடாமுறை, தற்போதைய நிலை ஆகியவற்றிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும் என கட்சி விரும்புகிறது. சமூக நீதி என்ற காந்நீய பாதையில் தன் கட்சி நம்பிக்கை வைத்திருப்பதாக அவர் கூறினார் நவீனமயத்தை ஆதரிக்கிறது என்றார்.

## யாருடையது?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் 'வெலிங்டன்' தியேட்டருக்கு அண்மையில்கண்டெடுக்கப்பட்ட கூப்பன் புத்தகம் ஒன்று கனகசபை அவனியூவைச்சேர்ந்த சி. ஐயாத்துரை என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

உடுப்பிட்டி

## மின்சார ஒப்பந்தம்

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டிக் கிராமசபையின் மின்சார விநியோகத்திற்கான பூர்வாங்க வேலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

இதற்கான மின்சார ஒப்பந்தத்தை கிராமசபை ஒரு தனியார் ஸ்தாபனத்துடன் மேற்கொண்டுள்ளது.

## சன்மானம்

4 கூப்பன் புத்தகங்கள் R 441265, R 441266, R 441269, N 462985 தவறிவிட்டன' கண்டெடுப்பவர் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். சிட்டு, 15, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1623

## மரண அறிவித்தல்

திரு. சு. வேலுப்பிள்ளை, மலாயன் பென்சனியர் காலமானார். இவர் சிதம்பரத்தின் அன்புக்கணவரும், சபாரத்தினம், மங்கயற்கரசி சற்குரு. தனலக்சுமி விசுவலிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் தகப்பனாரும், வைத்தியகலாநிதி சற்குரு விசுவலிங்கம், மீனாம்பிகை ஆகியோரின் மாமனாரும் ஆவார். இன்று (4-1-70) பிற்பகல் 3 மணி அளவில் 119 ராசாவின் தோட்ட வீதியின் இல்லத்திலிருந்து ஈமைக்கிரிகைகளுக்கு வில்லூண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினரும் நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். 1630

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org